10/ SAMAR
87, RUE DE COLOMBES, 92600 ASNIERES SURSEINE, FRANCE

www.padippakam.com


# சங்கமணி

AKHBAR MINGGUAN SANGAMANI - வார இதழ் PP483/12/96 ஸ்தாபிதம் 1952

மணி 44 ஈஸ்வர ஆண்டு புரட்டாசி -4 வெள்ளிக்கிழமை 19-9-1997 விலை 50 காசு இதழ் -15


## சுங்கை செக்கா தோட்டத்தில் ஆட்குறைப்பு:

# இழப்பீட்டு பிரச்னைக்கு தீர்வு பிறந்தது!

## நெகிரி மாநில செயலாளர் இளங்கோவன் தகவல்

**நெகிரி மாநிலத்தைச் சேர்ந்த நியூ லாபு தோட்டத்தின், சுங்கை செக்கா டிவிசனில் வேலை செய்து வந்த 39 குடும்பங்களை உள்ளடக்கிய 51 தொழிலாளர்கள் அத்தோட்டத்தை விட்டு வெளியேற வேலை நீக்க நோட்டீஸ் பெற்றுள்ளனர்.**

தோட்டம் நஷ்டத்தில் நடத்தப்படுவதை முன்னிட்டு தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவதாக நிர்வாகம் கூறியுள்ளது.

தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய அனுகூலங்களை பெறுவதற்கு சங்கம் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்துள்ளது என்று மாநிலச் செயலாளர் திரு. இளங்கோவன் குறிப்பிட்டுள்ளார்.

சைம் டார்பி நிறுவனத்திற்கு சொந்தமான இந்த தோட்டத்தில் தற்சமயம் எவ்வித மேம்பாட்டுத் திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் வேலை இழக்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும் சைம் டார்பி நிறுவனத்திற்கு சொந்தமான லாபு ஹிலிரில் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்களில் வாய்ப்பு வழங்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. இளங்கோவன் சொன்னார்.

வீட்டு பிரச்னை தொடர்பாக தோட்ட நிர்வாகத்துடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையின் போது, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் லாய், சிருசா சட்டமன்ற உறுப்பினர் செல்லக்கிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ ஹோான் சூன் கிம் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.



பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் பெயர் பட்டியல் மாநில மேம்பாட்டு குழுவின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் வீடு பெறுவது உறுதி செய்யப்படும் என்று சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் உறுதி கூறியுள்ளனர்.

வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப் பூர்வமான அனுகூலங்களோடு, கூடுதலாக இழப்பீடாக ஆண்டொன்றுக்கு 400 ரிங்கிட்டும் வழங்குவதற்கு நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

இதற்கிடையே தோட்டத்தில் இருக்கும் ஆலயத்தை மாற்று இடத்தில் கட்டிக் கொள்வதற்கு முப்பதாயிரம் வெள்ளியையும் நிறுவனம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது என்றும் திரு. இளங்கோவன் சொன்னார்.

சுங்கை செக்கா தோட்டத் தொழிலாளர்கள் 51 பேரும் இந்த பேச்சு வார்த்தையின் மூலம் பெறப்பட்டுள்ள தீர்வில் திருப்தியடைவார்கள் என் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.





## தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும் உறுப்பினர் ஆக்குவோம்!

### ஜி. சங்கரன் தகவல்

தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அனைவருமே சங்கத்தின் உறுப்பியம் பெற்றுள்ளார்கள் என்ற நிலையை உருவாக்க தோட்ட கமிட்டிகளும் மாநில கமிட்டிகளும் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று நமது பொதுச் செயலாளர் திரு ஜி. சங்கரன் கேட்டுக் கொண்டார்.

சங்கத்தின் உறுப்பிய பலமே

2ம் பக்கம் பார்க்க

## நெகிரி செயலாளருக்கு பிரியாவிடை விருந்து



நமது சங்கத்தில் கடந்த முப்பதாண்டு காலமாக பணியாற்றி, ஆகக் கடைசியாக நெகிரி மாநிலச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வந்த திரு. இராமனுஜம் அண்மையில் பதவி ஓய்வு பெற்றார். அன்னாருக்கு நடத்தப்பட்ட பிரியாவிடை விருந்தில் நமது பொதுச் செயலாளர் திரு. ஜி. சங்கரன் கலந்து கொண்டு திரு. இராமனுஜம் அவர்களின் சேவையை பாராட்டி பேசினார். பொதுச் செயலாளர் அவர்கள் திரு. இராமனுஜத்திற்கு மாலை அணிவித்து சிறப்பு செய்வதை படத்தில் காணலாம்.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!**

www.padippakam.com



சங்கமணி

வெள்ளிக்கிழமை 19-9-1997

# மனித குலத்தின் மாணிக்கம் மறைந்து விட்டது!



மனித குல ஜோதி என்று உலக மக்களால் வர்ணிக்கப்பட்ட "அன்னை திரேசா", தனது 87ஆவது வயதில் கோடிக்கணக்கான மக்களை மீள முடியாத துக்கத்தில் மூழ்கடித்து விட்டு, மீண்டு வர முடியாத தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்.

"நின்று விடுவேன்; நிறுத்திவிடுவேன்" என்று இருதய துடிப்பு பலமுறை அவரிடம் இழுபறி நாடகம் ஆடியது என்றாலும், ஓடி ஆடி பணியாற்றுவதை அன்னை திரேசா நிறுத்திக் கொள்ளவில்லை.

ஆனால் அந்த நடமாடும் தேவதை, எழுபது ஆண்டுகால சேவைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நிரந்தர ஓய்வு தேடி சென்றுவிட்டது.

பிறந்த நாட்டுக்கு - சொந்த இன மக்களுக்கு சுதந்திரம் பெறவும், சுகங்களை தேடி வைக்கவும் உழைத்தவர்களை, தியாகம் செய்தவர்களை உலகம் அறிவித்துள்ளது.

ஆனால் ஐரோப்பாவில் அல்போனியா என்னும் நாட்டில் பிறந்து, இந்தியாவில் குடியேறி, இந்திய பிரஜையாகி அங்குள்ள ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்காக தனது வாழ்க்கையே அர்ப்பணித்தவர் அன்னை திரேசா. உலக அளவில் தமது ஆசிரமத்தின் கிளைகளை உருவாக்கி உலக மக்களுக்கு சேவையாற்றி, உலக ஜோதியாய் பிரகாசித்தவர் இந்த தேவதை.

நாடு - இனம் - மொழி - நிறம் என்ற பாகுபாடுகளுக்கு அப்பால் மனித நேயத்தை மட்டுமே முன்நிறுத்தி அரும்பணியாற்றி வந்தவர் மனுக்குலத்தை கலங்க வைத்துவிட்டு போய்விட்டார்.

அன்னை திரேசா உலக அமைதிக்காக, ஆற்றிய பணிக்காக நோபல் பரிசும் அவரை தேடிவந்துள்ளது. எண்பதற்கும் மேற்பட்ட மேலும் பல உலகலாவிய விருதுகளும் அவரை சென்று அடைந்துள்ளது.

ஆனால் இந்த விருதுகள் அன்னை திரேசாவிற்கு எந்த சலனத்தையும் ஏற்படுத்தியதில்லை. தனது சேவையின் மூலம் ஏழை எளிய மக்களின் உள்ளத்திலிருந்து உதிக்கும் உன்னத மொழிக்காகவே அவரது தலையும், கரங்களும் தாழ்ந்துள்ளது.

அன்னை திரேசா இந்திய பிரஜையாகி இந்திய மக்களுக்கு ஆற்றிய சேவைக்காக, அந்நாட்டு அரசாங்கம் வழங்கி இருக்கும் அங்கீகாரத்திற்காக, அந்த ஜனநாயக நாட்டு தலைவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

அரசியல் - அரசாங்க பிரமுகர்களுக்கு மட்டுமே கிடைத்து வந்த அரசாங்க மரியாதையுடனான இறுதி மரியாதையை அன்னை திரேசாவிற்கும் வழங்க முன் வந்திருப்பது அவரது சேவைக்கு கிடைத்த அங்கீகாரமாகும்.

அன்னை திரேசாவின் மறைவின் துக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் பல நாடுகள் தங்களது கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விட்டிருக்கின்றன.

துக்கப்படுவதும், அரைக்கம்பத்தில் படபடப்பதும் கொடிகள் மட்டுமல்ல: கோடிக்கணக்கான உள்ளங்களும் பதைபதைத்துக் கொண்டிருக்கின்றன.

உலக மக்களின் மேன்மைக்காகவும், ஏழை எளிய மக்களின் துயர்துடைப்பதற்காகவும் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட அந்த மனித குல மாணிக்கத்தின் ஆத்மா சாந்தியடையட்டும். எண்ணற்ற தொழிலாளர் சமுதாயத்தின் சார்பில் பிரார்த்தனை நாம் செய்வோம்.

-இந்திரன்

முதல் பக்கத் தொடர்ச்சி

தொழிலாளர் சமுதாயத்தின் சக்தி என்பதை உணர்ந்து சங்கத்தின் முயற்சிக்கு தொழிலாளர்கள் அனைவருமே ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பகாவ், பத்தாங் ஜெலாய் தோட்டத்தில் நடந்த சங்கத்தின் பொன் விழாவில் கலந்து கொண்டு பொதுச் செயலாளர் பேசினார்.

தோட்ட கமிட்டிகளின் ஒத்துழைப்போடு நமது தேசிய நிர்வாகச் சபை உறுப்பினர் திரு. செல்வராஜ் மற்றும் மாநில கமிட்டிகள் உட்பட சிலாங்கூர் மாநில கமிட்டிகளும் இந்த பொன் விழா ஏற்பாட்டை மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

இந்த விழாவில் திரு. ஜி. சங்கரன் தொடர்ந்து பேசியதாவது:-

நமது சங்கத்தின் பொன் விழாவை நாம் தொடர்ந்து கொண்டாடி வருகின்றோம். ஒரு அமைப்பு பொன் விழாவை எட்டி இருப்பதும். அதன் வரலாறு மீண்டும் நினைவு கூறப்படுவதும் புதிய சமுதாயத்திற்கு புத்துயிர் ஊட்டக் கூடியதாக அமையும்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளில் தோட்டத்திலுள்ள இளைஞர்களையும் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். அதன்வழி அவர்களுக்கு சங்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும்.

தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் என்பது பொழுது போக்கிற்காக அமைக்கப்பட்ட அமைப்பல்ல. தொழிலாளர் சமுதாயத்தின் அடிமை விலங்கை ஒடிக்க அமைக்கப்பட்ட அமைப்பாகும்.

இந்த சமுதாயத்தின் உயர்விற்கும் விழிப்புணர்விற்கும் சங்கம் ஆற்றியுள்ள பணிகளையும், சங்கத் தலைவர்கள் செய்துள்ள தியாகத்தையும் இளைய தலைமுறையினருக்கு உணர்த்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொன்டார்.

தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களில் உறுப்பினர் அல்லாதவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும் தோட்ட கமிட்டிகளின் முயற்சிகளுக்கு தொழிலாளர்களுக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார் அவர்.

இந்த விழாவில் தேசியத் தலைவர் திரு. மு. பச்சையப்பன், நிர்வாகச் செயலாளர் திரு. நவமுகுந்தன், மாநிலத் தலைவர் திரு. சடையப்பன், முன்னாள் மாநிலத் தலைவர் திரு. ராமையா ஜே.பி., சிலாங்கூர் மாநிலச் செயலாளர் திரு. தாமசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக தேசியத் தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தேசிய தலைவர் திரு. மு. பச்சையப்பன் சிறப்புரையாற்றினார்.

ஒரு காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் இன்றி அவதிப்பட்டனர். தோட்ட தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, தொழிலாளர் சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அவர்களின் அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட்டது. தொழிலாளர்களின் பால் சங்கம் அக்கறை கொண்டு பல்வேறு மேம்பாடுக்கு வழி வகுத்து தந்துள்ளது. இன்றும் சங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்காக போராடி வருகிறது. அன்றும் சரி, இன்றும் சரி தோட்டத் தொழிலாளர்களுக்காக போராடி வருகிறது என்று தமதுரையில் அவர் குறிப்பிட்டர்.

அதனைத் தொடர்ந்து இவ்விழாவில் தேசிய நிர்வாகச் செயலாளர் திரு. நவமுகுந்தன் சிறப்புரையாற்றினார்.

அவர் தமதுரையில் ஆரம்ப காலம் தொட்டே சங்கம் கல்விக்கு முக்கியத்துவம் தந்து வந்துள்ளது. தோட்டப் பட்டாளிகளின் பிள்ளைகள் எத்தனையோ பேர் கல்வி கடனுதவிப் பெற்று பட்டதாரிகளாகவும் இன்னும் பல நிலைகளில் சமுதாயத்தின் மேம்பட்ட நிலைக்கு வந்துள்ளனர். எனினும் இன்னும் திரும்ப வராமலிருக்கும் 41 லட்சம் கல்வி கடனுதவியை பெற சங்கம் ஆக்ககரமான உரிய நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதே வேளையில், தோட்டப் பாட்டாளிகளிள் பிள்ளைகளின் பால் குறிப்பாக அவர்களின் கல்வியின் பால் சங்கம் அக்கறை கொண்டுள்ளது.

மணவர்கள், நமது தொழில் நுட்ப கல்லூரியான எக்ரோவில் இணைந்து தங்களது கல்வியை தொடருமாறும் திரு. நவமுகுந்தன் கேட்டுக் கொண்டார்.

மேலும் 1998ம் ஆண்டுக்கு பிறகு உயர்க் கல்வி தொடரும் மாணவர்களுக்கு மீண்டும் கல்வி கடனுதவி வழங்க சங்கம் திட்டமிட்டுள்ளது. அதன் படி கல்வி மேம்பாட்டுக்காக வருடம் ஒன்றுக்கு 5 லட்சம் வெள்ளியை வழங்க சங்கம் தீவிரமான மற்றும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை எடுத்து வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

# இல்லாத - சொல்லாத பிரச்சனைக்கு தீர்வா?

**எல். முனுசாமி, பூச்சோங்.**

**கே: டயானா - அன்னை திரேசா ஆகிய இருவரில் யாருடைய மரணம் உங்களை பாதித்தது?**

ப: டயானா இன்று உலக மக்களால் கண்ணீரோடு நினைத்து பார்க்கக் கூடியவராக இருந்தாலும், சர்ச்சைகளிலும் சிக்கி அசிங்கமும் பட்டிருக்கிறார். ஆனால் உலகத்தில் மிகப் பெரிய வாழ்க்கை அவருக்கு கிடைத்தது என்று வியந்த பொழுதில், அவர் அங்கே நரகத்தைதான் அனுபவித்தாரா என்கிற கவலை அவர் மீது இரக்கம் கொள்ள செய்தது. இவர்

## டயானா - திரேசா மரணம் பற்றி..?

குளிக்கவும் குடிக்கவும் கூட "சுதந்திரம் இல்லாத" பெண்ணாக இம்சைப் படுத்தப்பட்டதற்காக மனம் இறங்கி இருக்கிறது. இறுதியில் அவரை விரட்டு விரட்டி கொன்றிருக்கிறார்களே என்ற ஆதங்கம் அவர் மீதான அனுதாபத்தை அதிகரிக்கச் செய்திருக்கிறது. எங்கோ பிறந்து - எங்கோ வளர்ந்த அன்னை திரேசா, கல்கத்தாவில் வாழ்க்கையை முடித்துக் கொண்டிருக்கிறார். தன்னுடைய வாழ்க்கையே வசதியற்ற ஏழை - அனாதை குழந்தைகளுக்காக அர்ப்பணித்தவர் அன்னை திரேசா. முன்னவரின் மரணம் அனுதாபத்தை ஏற்படுத்தியது அடுத்தவரின் மறைவு துக்கத்தை கொடுத்தது.

**கே: அன்னை திரேசா லண்டனில் மரணமடைந்திருந்தால் டயானாவின் இறுதிச் சடங்கை போல பிரமாதமாக நடந்திருக்குமா?**

ப: இருந்திருக்கலாம். ஆனால் "எங்கு யார் இறந்தாலும் தீக்குளிப்போம்" என்று செத்து மடியும் தியாகத்தை இந்தியர்களைவிட வேறு யாரால் செய்ய முடியும்?

**கிருஷ்னன் - கல்யாணி, கெர்லிங்.**

**கே: அன்னப் பறவை எப்படி பாலை மட்டும் உறிஞ்சி தண்ணீரை ஒதுக்கி விடுகிறது...?**

ப: அந்தப் பறவையை பார்த்த பிறகு தான் இந்த உண்மைக்கு விளக்கம் கூற முடியும்!

**கே: நினைவுகள்தான் கனவாக தோன்றுமா....?**

ப: சில வேளைகளில் நினைவிற்கு அப்பாற்பட்டவைகளாகவும் இருக்கக் கூடும். நிகழக் கூடியவற்றின் அறிகுறியாகவும் இருக்கும்.

**எம்.எஸ். மணியம், பெட்போர்ட் தோட்டம்.**

**கே: காசிக்கு போனல் கர்மம் தீருமா...?**

ப: காசியிலேயே பிறந்து, அங்கேயே வாழ்ந்து மடிபவர்கள் கர்மத்திற்கு அப்பாற்பட்டவர்களா?

**கே: லஞ்சத்திற்கு எதிரான போராட்டத்தில் மலேசியா வெற்றி பெறுமா...?**

ப: சில வேளைகளில் சருக்கல் இருந்தாலும் பெரும்பாலும் வெற்றி கிடைத்துள்ளது.

**கே: முன்னேறி வரும் மலேசியாவுக்கு நாணய வீழ்ச்சி ஏற்பட்டால் தொழில் துறை பாதிப்பு ஏற்படுமா..?**

பொதுச்செயலாளரிடம் கேட்டுப் பெறுங்கள்

## கேள்வி-பதில்







ப: தொழில் துறை பாதிக்கப்படலாம். அதேவேளையில் அந்நிய முதலீடுகளும் அதிகரிக்கலாம். ஒட்டு மொத்தத்தில் நாணய மதிப்பு வீழ்ச்சி, பொது மக்களுக்கு பாதிப்பைத்தான் கொண்டு வரும்.

**கே. மோகன், குளுவாங்.**

**கே: எப்போதும் சீரியசாகவே பதில் சொல்கிறீர்களே, ஒரு ஜோக் சொல்லக் கூடாதா?**

ப: இப்படியும் ஒரு குற்றச்சாட்டா? உங்கள் ஆசையை ஏன் கெடுப்பானேன்! வேலைக்கு போகும் கணவனுக்கு மனைவி சமைத்து கொடுத்து அனுப்பி இருக்கிறார். அன்றைய சாப்பாட்டை நிர்வாகி சாப்பிட்டதாக மனைவியிடம் கூறினார் கணவர். "அப்படியா, மானேஜர் சாப்பிட்டாரா? பாராட்டினாரா? என்று ஆவலோடு கேட்டாராம் மனைவி. பொறுமையாக பதில் சொன்னான் கணவன்.

"ஆமாம்! உங்களுக்கு பொறுமை அதிகம் தான் என்று என்னை வெகுவாக பாராட்டினார்.

**கே: தோட்டங்களில் முன்பு மாதிரி போட்டி விளையாட்டுக்கள் நடப்பதில்லையே, ஏன்?**

ப: தோட்டத்தில் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறையத் தொடங்கியது முதல் இதுபோன்ற நிகழ்ச்சிகளும் குறைந்துவிட்டன. எனினும் ஆர்வ முள்ளவர்கள் நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். தோட்ட கமிட்டிகள் இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். பக்கத்து தோட்டக் கமிட்டிகளோடும் தொழிலாளர்களோடும் இணைந்தும் செய்யலாம்.

**ஏ. கிருஷ்ணன், கெர்லிங் தோட்டம்.**

**கே: கிருபானந்த வாரியாரின் பேச்சுக்கள் புத்தகமாக வெளி வந்துள்ளதா?**

ப: நூலாகவும், கேசட்டுக்களாகவும் நிறைய வந்துள்ளன.

**கே: பாலை பார்க்காவிட்டாலும் பானையை பார்க்க வேண்டும் என்பது எதனால்...?**



ப: தலைவர்கள் வரலாம் போகலாம்; சங்கம் என்னும் அமைப்பு என்றும் நிலைக்கும். எனவே தனிமனிதர்கள் மீதுள்ள விருப்பு வெறுப்புக்காக சங்கத்தை களங்கப்படுத்தக் கூடாது என்று சொல்கிறோம் அல்லவா? அப்படித்தான் இதுவும்.

**சூசைராஜ், நெகிரி செம்பிலான்.**

**கே: தங்களது தோட்டத்தில் தொழிலாளர்களின் பிரச்னைகளை தோட்டக் கமிட்டிகள் தீர்க்காமல் முதலாளிகளுக்கு சாதகமாக நடந்துக் கொள்வதாகவும், தலைமையகத்திற்கு புகார் செய்தும் எந்த பலனும் கிடைக்கவில்லை என்றும் ஜொகூர் ச்சா ஆ, ஸ்ரீ விஷ்ணு என்பவர் "மலேசிய நண்பன்" பத்திரிகையில் கேள்வி எழுப்பி இருக்கிறாரே! அது பற்றி உங்கள் கருத்தென்ன?**

ப: ஒரு பத்திரிகையாளருக்குரிய பொறுப்போடு, பொறுப்பான முறையில் பதில் வழங்கி இருக்கும் திரு. ஆதி.குமணன் அவர்களுக்கு முதலில் பாராட்டுக்கள். நன்றி.

மாநில பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு விசாரித்தேன். அப்படி ஏதும் புகார்கள் கிடைத்ததாக தகவல் இல்லை. அந்த கேள்விக்கு முன்னரோ பின்னரோ தலைமைச் செயலாளர் என்ற வகையில் எனது கவனத்திற்கும் சம்பந்தப்பட்டவர் பிரச்னையை கொண்டு வரவில்லை. இல்லாத - சொல்லாத பிரச்னைக்கு தீர்வு எப்படி காண்பது?

**கே: காலம் முழுவதும் உழைத்தும், தொழிலாளர்கள் இன்னமும் உயர முடியவில்லையே என்?**

ப: தொழிலாளர்கள் எல்லோருமே உயரவில்லை என்று கூறிவிட முடியாது. ஒரு தோட்டத்தில் ஆயிரம் பேர் வேலை செய்தால், அவர்களில் ஐநூறு பேராவது அருகிலுள்ள நகரங்களில் வீடு வாங்கி வசதியாக வாழ்வதை பார்க்கிறோமே! அந்த முயற்சிதான் நமது உயர்விற்கு அடித்தளம் அமைக்கும்.

www.padippakam.com



# பகுதி நேர வேலைக்கு "படையெடுக்கிறார்கள்"

## அமெரிக்காவில் வேலையில்லா திண்டாட்டங்களின் எதிரொலி

**புருசெல்ஸ் (அமெரிக்கா)**

அது ஒரு விருந்து நிகழ்ச்சி! தமது அடுத்த தேர்தல் பிரசாரத்திற்கு நிதித் திரட்ட அந்த அரசியல்வாதி அதனை ஏற்பாடு செய்திருந்தார்.

"கடந்த 3 ஆண்டுகளில் 80 லட்சம் வேலை வாய்ப்புக்களை நாம் உருவாக்கி இருக்கிறோம் என்று அவர் உணர்ச்சிகரமாக மேடையில் முழங்கிக் கொண்டிருக்க. ஆமாம் அந்த வேலை வாய்ப்புக்களில் மூன்று எனக்குத் தான் கிடைத்தது ஈன்று ஒரு ஓரத்தில் முணுமுணுத்து தமது மனக்குமுறலைக் கொட்டினார் அந்த விருந்து நிகழ்ச்சியின் "வெய்ட்டர் ஒருவர். (உபசரிப்பு ஊழியர்)

அமெரிக்காவின் பொருளாதார புள்ளி விபரங்களை அந்நாட்டில் உள்ள பெருவாரியினர் இப்படித்தான் நகைச்சுவையாக விமர்சிக்க தலைப்பட்டிருக்கிறார்கள்.

அரசாங்கம் தருகின்ற புள்ளி விபரங்களை அப்படி நம்ப வேண்டும் என்றால் கடந்த 7 ஆண்டுகளாக அங்கு பொருளாதாரம் நிலைப்பட்டிருக்கிறது என்று நம்ப வேண்டும். வேலையில்லா திண்டாட்டம் வரலாற்றில் முதன் முறையாக (80 ஆண்டுகளில் கடந்த மே மாதத்தில் 4.8 விழுக்காடாக குறைக்கப்பட்டது) என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டது என்றும் கடந்த 1992ம் ஆண்டு முதல் 1 கோடி வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டது என்பதனையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த புள்ளி விபரங்கள் சரியாக இருக்குமானால் ஐரோப்பிய தொழிற்சங்கத்திற்கு அதில் மகிழ்ச்சிதான்.

ஆனால் அந்த தொழிற்சங்கத்தின் புள்ளிவிபரப்படி 1 கோடியோ 81 லட்சம் பேர் வேலையில்லாமல் திண்டாடுவதாகவும் சராசரி வேலையில்லை திண்டாட்ட விகிதம் 11 விழுக்காடாகவும் இருப்பதாக தெரிகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய தொழிற்சங்கத்தின் தலைநகராக இருந்து

* ஏழை - பணக்காரர்கள் இடைவெளி என்றுமில்லாத அளவில் உயர்வு!
* உத்தரவாதமே இல்லாத வேலைகளில் 3 கோடி தற்காலிக ஊழியர்கள்!
* சராசரி "இரண்டு" வேலைகளைச் செய்யும் 80 லட்சம் அமெரிக்கர்கள்!

வரும் லக்ஸம்பர்க் வரும் நவம்பர் 21ம் தேதியில் இருந்து 22ம் தேதி வரை வேலையில்லா திண்டாட்டத்தை மையமாக வைத்து விவாதிக்க தனது மாநாட்டை கூட்டவிருக்கிறது. இதில் அமெரிக்காவை மையமாக வைத்து விவாதங்கள் நடைபெறவிருக்கின்றன.

அமெரிக்காவின் வேலையில்லா திண்டாட்டங்கள் பற்றி வெளியிடப்படும் புள்ளி விபரங்கள் மிகப் பெரிய எண்ணிக்கையின் ஒரு சிறிய பகுதிதான் (ஒரு பெரிய ஐஸ் கட்டியின் சிறு பகுதிதான்) என்று அமெரிக்க தேசிய தொழிற்சங்க மையம் குறிப்பிடுகிறது.

கடந்த மே மாதத்தில் மட்டும் அதன் வேலையில்லா திண்டாட்டம் 65 லட்சத்து 43 ஆயிரமாக (4.8.) இருந்ததாக குறிப்பிடப்பட்டாலும் அது 1 கோடியே 20 லட்சத்தை நெருங்கும் என்று அந்த தொழிற்சங்க மையம் குறிப்பிடுகிறது.



கிட்டத்தட்ட 10 லட்சம் பேர் வேலை தேடி அலுத்துப் போய் விட்டார்கள். வேலை தேடுவதில் அர்த்தமே இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இதர கிட்டத்தட்ட 40 லட்சம் பேர் பகுதி நேர வேலைகளைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இடைக்கால வேலைகளைத் தேடி கொள்ளும் போக்கும் தற்காலிக வேலை வாய்ப்புக்களும் சராசரி ஒரு அமெரிக்கரின் சம்பளத்தை வெகுவாக குறைத்திருக்கிறது என்று குறிப்பிடுகிறார் அமெரிக்க தேசிய தொழிற்சங்க மையத்தின் தலைவர் திரு. ஜோன் சுவீனி! அமரிக்கர்களுக்கும் சம்பள உயர்வு தேவை என்பதை வலியுறுத்தி இவர் ஒரு புத்தகமே வெளியிட்டு இருக்கிறார்.

குறைந்த சம்பளம், குறைந்த சுகாதார காப்புறுதி பாதுகாப்பு, பென்ஷன் திட்டங்கள் இல்லாமல் போவது மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்பு இல்லாமல் இருப்பது என்று புதிய பிரச்னைகள் அதனால் முளைத்திருப்பதாக அவர் கூறுகிறார்.

தற்போது அமெரிக்காவில் இந்த இடைக்கால அவசர தொழிலார்கள் எண்ணிக்கை 3 கோடியே 70 லட்சமாக இருப்பதாகவும் இது ஒட்டு மொத்த அமெரிக்க தொழிலாளர் சமுதாயத்தின் கால் பகுதி என்றும் கடந்த 1985ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் இது 19 விழுக்காடு உயர்வு என்றும் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இதனால் விளைந்திருப்பது என்ன? அமெரிக்கர்கள் அதிகமாக உழைக்கிறார்கள் குறைவான சம்பளத்தை பெறுகிறார்கள்.

### 2 வேலைகள்

கிட்டத்தட்ட 80 லட்சம் பேர் குறைந்தது இரண்டு வேலைகளைச் செய்கிறார்கள். இந்த இடைக்கால தற்கால தொழிலாளர் பிரச்னைதான் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அதாவது சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் தொழிலாளர்களின் மிகப் பெரிய தொழிலாளர் வேலை நிறுத்தம் வெடித்தது.

டீம்டர்ஸ் தொழிற்சங்கத்திற்கும் (Teamters Union) யுனைடெட் பார்சல் சர்வீசஸ் (United Parcel Services) நிர்வன நிர்வாகத்திற்கும் இடையில் நடந்த இந்த போராட்டம் அமெரிக்க தொழிற்சங்க வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக விளங்கியது. இந்த போராட்டத்தின் விளைவால் சம்பள உயர்வைப் பெறுவதில் தொழிற்சங்கம் வெற்றி கண்டதுடன் இதுவரை "இடைக்காலமாக" இருந்த நிலையற்ற வேலைகள் நிரந்திரமாக்கப்பட்டன.

அமெரிக்காவில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளி கடந்த 20 ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. சாதாரண தொழிலாளர்களின் சம்பளமோ 20 விழுக்காடாக குறைந்திருக்கிறது.

ஆனால் அதே நேரத்தில் நிர்வாக இயக்குனர்கள் போன்ற பெரும் பதவிகளை வகிப்பவர்களின் சம்பளம் 499 விழுக்காடு வரை உயர்ந்திருக்கிறது.

### இடைவெளி இடைவெளி

ஒரு சராசரி அமெரிக்கருக்கும் செல்வ வளம் படைத்த தொழில் அதிபர்களுக்கும் இடையில் மிகப் பெரிய சம்பள இடைவெளி ஏற்பட்டு வருகிறது. அமெரிக்கர்கள் மற்றவர்களின் சம்பளத்தோடு தங்கள் சம்பளத்தை ஒப்பீடு செய்து பார்க்க அமெரிக்க தேசிய தொழிற்சங்கம் அவர்களுக்கு இணையத்தின் வழி (இண்ணடர் நெட்) வழி வசதிகளைச் செய்து தந்துள்ளது.

கடந்த 1995ம் ஆண்டில் 60,00 தொழிலாளர்களை வேலையில்லாமல் செய்த ஐபிஎம் எனப்படும் கம்ப்யூட்டர் தயாரிப்பு அதிபதி திரு. லூய்ஸ் கெர்ஸ்னர், கடந்த 1996ம் ஆண்டில் 69 லட்சத்து 70 ஆயிரம் டாலரை சம்பளமாகவும் 2 கோடியே 30 லட்சம் டாலரை போனசாகவும் பெற்றார். இது ஒரு சராசரி அமெரிக்கரின் வருடாந்திர வருமானத்தை விட 1,259 விழுக்காடு அதிகமாகும். "வால்ட்டிஸ்னி" தொழில் அதிபர் மைக்கல் பிஷர் அமெரிக்க அதிபரை விட 1,000 மடங்கு அதிகம் சம்பாதிக்கிறாராம்.

கடந்த 1975ம் ஆண்டில் "1க்கு 48" என்ற அளவில் இருந்த இந்த இடைவெளி கடந்த 1994ம் ஆண்டில் "1க்கு 187" என்ற இடைவெளியை ஏற்படுத்தியிருக்கிறது. விளைவு? 1 விழுக்காட்டு அமெரிக்கர்களின் கையில் அமெரிக்காவின் 68 விழுக்காடு செல்வ வளம் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கிறது.

உலகின் 28 பணக்கார நாடுகளை ஆய்வு செய்து, அமெரிக்காவே இதில் முதலிடம் வகிப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.



அமெரிக்க அதிபர் கிளிண்டனை விட ஒரு தொழில் அதிபர் 1,000 மடங்கு அதிகம் சம்பாதிக்கிறார்

படிப்பகம்

www.padippakam.com



# அன்பெனும் அகல்விளக்கை ஏற்றுங்கள்

# உங்களவருடனான ஆனந்தம் நீடிக்கும்!

வயதுக்கு வந்த பெண் தனக்குத்தானே சிரித்துக் கொண்டால், சாப்பிடப் பிடிக்காமல் இருந்தால், பாத்ரூமில் நிறைய நேரம் செலவழித்தால், அடிக்கடி கண்ணாடியில் அழுகு பார்த்துக் கொண்டால், இரவு நெடு நேரம் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தால்... காதல் அல்லது கல்யாண வெட்கம் என்று அர்த்தம்.

அப்புறம் என்ன டும்டும் மேளம்தான். புருஷன் வீடு, புதிய இடம், புதிய சூழல், புதிய அணுகுமுறை எல்லாவற்றையும் கடந்து கணவனையும் அவன் காதலையும் புரிந்து கொண்டு தன்னை அவனுக்குப் புரிய வைப்பதும் நேசத்தைக் கொட்டி நெகிழ வைப்பதும் ஒரு பெண்ணுக்கு பெரிய சவால்!

கடல் மாதிரியானது இல்லறம், கையளவு மாதிரி விஷயங்கள் இங்கே.

புதிதாக திருமணத்தைச் சந்திக்கப் போகிற பெண்களுக்கு மட்டும்தான் என்றில்லை, ஏற்கனவே மனைவியாகிவிட்டவர்களுக்கும் இந்த கட்டுரைப் பக்கம் பயன்படலாம். பலன் அடையலாம்.

* மனைவி என்ற தகுதியுடன் உங்கள் கணவரின் உயிர் உயிர்த் தோழி என்ற தகுதியையும் பெற முயலுங்கள். அம்மாவிடம், அப்பாவிடம், அண்ணன் - தம்பியிடம், மகனிடம்... சொல்லத் தயங்குகிற விஷயங்களைத் தோழியிடம் சொல்ல முடியும். நட்பின் பலம் அது. மனைவியே தோழியாய் அமைவது கணவன் பெறும் வரம்! அந்த வரத்தை உங்கள் கணவருக்கு வார்த்துக் கொடுப்பதில் பெருமை அடையுங்கள். காலையில் ஆபீசுக்கு அவர் கிளம்பும் போது முத்தம் எதிர்பார்ப்பதும், மாலையில் அவர் வீடு திரும்பும் போது மல்லிகை பூ எதிர்பார்ப்பதும் மட்டும் உங்கள் அன்பின் வேலை அல்ல. உங்களவர் தப்பாக நடக்கும்போது சரியை உணர்த்துங்கள். நல்வழியில் நடக்கத் திருத்துங்கள். உச்சகட்ட நட்பின் அடையாளம் அது!

* இன்னிக்கு அவர் வரட்டும் ரெண்டுல ஒண்ணு பார்த்துடறேன் என்று ஏதாவது பிரச்னையோடு கணவனுக்காகக் காத்திருக்காதீர்கள்.



இல்லறத்தில் கனியை விட்டுக் காயைத் தேடும் சமாசாரம் அது. இன்முகத்தோடு கணவனை எதிர்கொள்ளுங்கள். ஆற அமர கொஞ்ச நேரம் கழித்து நியாயமான பிரச்னையாக இருந்தால் மென்மையான குரலில் தெரிவியுங்கள்.

*அவருக்கு என்ன பிடிக்கும், அவரைச் சாந்தவர்களுக்கு என்ன பிடிக்கும் என்று உணர்ந்து கொஞ்சம் விட்டுக் கொடுத்து எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றாற்போல் நடந்து கொள்ளுங்களேன். அப்போதுதான் உங்களுக்காக அவரும் விட்டுக் கொடுக்க முன் வருவார். விட்டுக் கொடுத்து வாழ்வது இனிய இல்லறத்துக்கு நல்வழி.

* அவர் ஏதாவது தப்பாகப் பேசும் போதும் நடக்கும் போதும் காச்மூச் என கத்திப் பயமுறுத்தாதீர்கள். பகை உண்டாக்காத பொய்க்கோப வார்த்தைகளும் அன்பில்லாதது மாதிரி பாவ்லா காட்டி நடிப்பதும் போதும்... இவை போதும். உங்கள் மிஸ்டரை வழிக்கு கொண்டு வந்து உங்களிடம் கட்டிப்போட! விழியாலே காதல் மட்டும்தான் கதை பேச வேண்டும் என்றில்லை... வருத்தத்தையும் கோபத்தையும் கூட கோடிட்டுக் காட்டலாம்.

*உங்களவரின் பணிகளைப் புரிந்து கொள்ளுங்கள். எந்த விதத்தில் அவற்றுக்கு உங்களால் உதவ முடியும் என்று பாருங்கள்.

அவரின் லட்சியத்தை தெரிந்து கொள்ளுங்கள். அதை அடைய என்ன மாதிரியான உதவிகளை உங்களால் செய்து கொடுக்க முடியும் என்று சிந்தியுங்கள். அவரது ஆசாபாசங்களை அசைபோடக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களால் எப்படி எல்லாம் அவரை உற்சாகப் படுத்த முடியும் என்று யோசியுங்கள்.

* உணவில் உப்பு கலந்திருப்பது மாதிரி உங்கள் இருவரிடத்தும் அவ்வப்போது அளவான ஊடலும் தேவை. நீரும் நிழலும் அடுத்தடுத்து இருப்பது வெயிலில் அலைந்து சோர்ந்து உட்கார வருபவருக்கு எவ்வளவு இன்பம் தருமோ, அதே போல் அன்பு காட்டுபவரிடம் அளவான குட்டிச் சண்டை போடுவதும் கொள்ளை இன்பம்! புருஷன்காரன் மெய்யாலுமே தவறு செய்யா விட்டாலும் கூட பொய்ச் சண்டை போடுங்கள். அப்புறம் பாருங்கள்... அன்பு பொத்துகிட்டு ஊத்தும்.

* ஊடலுக்கு இன்னொரு தனித் தன்மையும் உண்டு! முன்னிரவுகளில் ஊடலின் எஃபேக்ட் தனி! சின்னதாய் சண்டைபோட்டு விட்டு கம்மென்று ஒதுங்கி கொள்ளுங்கள். அவர் வந்து கொஞ்சிப் புரிய வைப்பார்.

* சுயநலத்தைத் தொலைத்து விடுங்கள். உங்கள் நலமே அவர் நலம். அவர் நலமே உங்கள் நலம் என்பதை நினைவில் கொள்ளுங்கள் அவருக்கும் அதைப் புரிய வையுங்கள். உங்களுக்கிடையே இருக்கும் தனிமனித சுயநலத்தை எட்டி உதைத்து விரட்டி அடியுங்கள்.

* பட்ஜெட்டுக்குள் குடும்பம் நகர்த்துவது ஒரு கலை. அதை கற்றுக் கொள்ளுங்கள். முதலில் வரவு எட்டணா செலவு பத்தணா என்று ஓட்டைகையாக இருந்தால் ஓட்டு மொத்த விளைவு கடன்தான். உங்களவரின் சம்பளகவருக்குள் சகல செலவுகளையும் அடக்கிக் கொள்ள பழகுங்கள் (பத்து சதவிகிதப் பணத்தைக் கட்டாயம் சேமிக்க வேண்டும் என்பது நினைவில் இருக்கட்டும்).

* கண்டும் கேட்டும் உண்டும் நுகர்ந்தும் உற்றுப் பார்த்தும் கூட உங்களவர் பெற முடியாத இன்பத்தை நீங்கள் அவருக்கு கொடுக்க முடியும். ஐம்புலன்களாலும் அனுபவித்து மகிழும் அந்த ஆனந்தத்தை நீங்கள் மட்டுமே அவருக்கு வழங்க முடியும்.

## வெற்றி நிச்சயம்

வாழ்க்கை வீதியில் வளமாய் போக
விரும்பிய தொழிலில் உழைத்திடல் வேண்டும்
வாழ்க்கை வாழ்வதற் கென்ற நீதியை
வாழ்வோர் எல்லாம் விளங்கிடல் வேண்டும்!

சோம்பிக் கொண்டு தினமும் இருந்தால்
செய்யும் தொழிலும் தூங்கிப் போகும்
சோம்பலை தினமும் தூக்கி எறிந்து
தெம்புடன் உழைத்து வந்திடல் வேண்டும்!

சோதனை எல்லாம் சூழ்ந்த போதும்
சோர்ந்துக் கொண்டு தூங்கிட வேண்டாம்
வேதனைப் பட்டு வெந்தும் நொந்தும்
வெற்றி மாலையை இழந்திட வேண்டாம்!

போதனை யாவும் புகட்டிய போதும்
படிப்பினை யாக பெற்றிடல் வேண்டும்
சோதனை மேலே சோதனை வந்தால்
சோர்வு இன்றி உழைத்திடல் வேண்டும்!

தோல்வியைக் கண்டு துவண்டி டாமல்
தைரியம் கொண்டு துலங்கிட வேண்டும்
வீழ்வதற் கெல்லாம் எழுவதற் கென்ற
தத்துவம் ஏற்றால் வெற்றி நிச்சயம்!

கவிஞர் ச.வீ. கலைச்செல்வன்
பூச்சோங் இண்டா,
பூச்சோங்.

## பிலாஸ்டிக் பீரங்கி!

போர் முனையில் இயக்கப்படும் பீரங்கிகளின் சராசரி எடை 70 டன். இவை டீசல் எண்ணெயில்இயக்கப்படுகின்றன. பீரங்கிகள் என்றாலே இரும்பில் ஆனவை என்பது தெரியும். இப்போது கடினமான அல்லது மொத்தமான பிளாஸ்டிக்கால் ஆன பீரங்கிகளை இங்கிலாந்தைச் சேர்ந்த விகெரஸ் நிறுவனம் வடிவமைத்து வருகிறது. ரீ இன்போர்ஸ்ட் பிளாஸ்டிக் எனப்படும் கடின பிளாஸ்டிக் இதற்குப் பயன்படுத்தப்படுகிற தாம். சுமார் ஆறு மீட்டர் நீளமும் இரண்டு மீட்டர் உயரமும் உள்ள இந்த பீரங்கிகள் கம்ப்யூட்டர் மூலம் இயக்கப்படுகின்றன. உள்ளே இரண்டு இராணுவ வீரர்கள் அமர முடியும். விமான அழிப்பு ஏவுகணைகள், ராக்கெட் ஏவுகணைகள் போன்றவற்றைப் பொருத்தி இருக்க முடியும். இதன் எடை 15 டன்தான்! 21ம் நூற் றாண்டில் சண்டை நடந்தால் பிளாஸ்டிக் பீரங்கிகள் களத்தில் இறங்குமாம்!

படிப்பகம்

www.padippakam.com





# இந்த நிலைமை நிச்சயம் மாறும்!



மண் வாசனையில் ஆரம்பித்து இன்றுவரை அவரது பல்வேறு குணங்களை, இயல்புகளை, படிப்படியாக அறிந்து கொள்ள முடிவது ஓர் இனிமையான அனுபவம். அந்த அனுபவங்களைச் சொல்வதைக் காட்டிலும் தானே புரிந்து, அறிந்து கொள்வது மிக உயர்ந்த விஷயம். அந்த விஷயங்களின் ஒருபடிதான் ரேவதியுடனான இந்தச் சந்திப்பு.

சினிமாவைத் தாண்டி, தொலைக்காட்சி தொடர்களையும் தாண்டி "சுவாபிமான்" என்ற அமைப்பு மூலமாக அவர் மேற்கொண்டிருக்கிற பொதுநல விஷயங்கள் சாதாரணமானதல்ல.

இனி..

வாழ்க்கை எப்படி இருக்கிறது ரேவதி?

எல்லாத் திருமணமான பெண்களும் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று நினைப்பார்களோ? அது போல் என் திருமண வாழ்க்கையும் சந்தோஷமாக இருக்கிறது. நிறைவாக இருக்கிறது. என் திருமண வாழ்க்கையைத் தாண்டி, நான் மேற்கொண்டிருக்கிற நடிப்புத் தொழிலும் சரி, அதற்கப்பால் இப்போது நான் மேற்கொண்டிருக்கிற பொதுநல சேவையிலும் சரி எனக்கு இருக்கிற திருப்தியும், சந்தோஷமும் கொஞ்சநஞ்சமானதல்ல. மொத்தத்தில் நான் மேற்கொண்டிருக்கிற எல்லாவற்றிலும் என் திருப்தியும் நிறைவும் முழுமையாக இருக்கிறது. இதற்காக நான் நிச்சயம் பெருமைப்பட்டே ஆக வேண்டும். அந்தப் பெருமையும் எனக்கு இருக்கிறது.

மண் வாசனையில் ஆரம்பித்து இன்றுவரை சினிமாவில் நீங்கள் கற்றுக் கொண்ட விஷயங்கள் என்ன?

எவ்வளவோ இருக்கிறது. ஒன்றல்ல, இரண்டல்ல. மண் வாசனை 1983 செப்டம்பரில் துவங்கியது. கிட்டத்தட்ட அதே சமயம் ஊர்வசியும் வேறு சிலரும் சினிமாவில் அறிமுகமானார்கள். எனக்கு அப்போது வயது பதினாறோ அல்லது பதினேழோ இருக்கலாம். ஒரு இளம் பெண்ணின் எண்ணத்துடன் விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே நானும் அப்போது இருந்தேன். மெச்சூரிட்டி அதிகம் இல்லாத நேரம் அது. டைரக்டர் பாரதிராஜா மூலம் நான் கற்றுக் கொண்ட விஷயங்கள் ஏராளம், ஏராளம். தேர்ந்தெடுத்துச் செய்ய வேண்டும் என்ற இயல்பான என் எண்ணங்களுடன் நான் கதாபாத்திரங்களைத் தேர்வு செய்து கொண்டேன். எனக்குக் கிடைத்த கதாபாத்திரங்களும் சரி, என்னை இயக்கிய டைரக்டர்கள் பாலச்சந்தர், பாலுமகேந்திரா... மற்றும் எவ்வளவோ பேர் என் நல்ல நேரத்தின் அறிகுறிகள். இவர்கள் மூலம் நான் கற்றுக் கொண்டவை ஏராளம். அதே சமயம் என்னென்ன செய்யக் கூடாது என்று அவர்கள் மூலம் எனக்கு புரிந்து விஷயங்களும் அதிகம். இல்லாவிட்டால் 85 படங்களை என்னால் முடித்திருக்க முடியாது.

"வாழ்க்கையில் எவ்வளவோ நல்ல விஷயங்களை எத்தனையோ பேர் மூலம் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளவே செய்கிறோம். ஆனால் எனக்கு கிடைத்த நேர்மையான நல்ல விஷயங்களும் அதன் மூலம் நான் பெற்ற உயர்ந்த அனுபவங்களும் எனக்கு கிடைத்த அதிர்ஷ்டங்கள். என்னால் மறக்க முடியாத நல்ல விஷயங்கள். எதை எல்லாம் செய்யக் கூடாது என்பதை இந்தக் காலக் கட்டத்தில் நான் புரிந்து கொண்டேன்... அவற்றை எல்லாம் இன்றுவரை நான் கடை பிடித்து வருகிறேன். இவற்றுக்காக நான் இப்போதும் சந்தோஷப்படுகிறேன்.

தொலைக்காட்சியில் தற்போது பங்கு பெற்றுள்ளது ஒருபுறமிருக்க எத்தனை சினிமாக்களில் தற்போது நடித்து வருகிறீர்கள்?

"மன்னிக்க வேண்டும். ஒரு வருஷமாக ஒரு படம் கூட எனக்குக் கிடையாது. எத்தனையோ புதியவர்கள் சினிமாவில் நுழைந்து விட்டார்கள். எனக்கென்று என் காரியங்கள் மிக நிறைவாகவே இருக்கின்றன. தற்சமயம் என் கவனம் அவற்றின் மீதுதான். சினிமாக்கள் இல்லையே என்ற வருத்தமோ, ஆதங்கமோ எனக்குத் துளிகூட கிடையாது. அந்தக் காலகட்டத்தை முழுவதுமாகப் பார்த்தாகிவிட்டது. புதிதாக நுழைந்திருப்பவர்கள் அவற்றை இனிமேல் பார்க்கட்டும்.

தற்போது கதைகளில் முழுமை குறைந்து போய் வெளிவரும் சினிமாக்களைப் பற்றி உங்களது உண்மையான அபிப்பிராயம் என்ன?

உண்மையில் வருத்தமாக இருக்கிறது. ஆனால் நான் அறிந்த வரை இது தற்காலிகமான நிலைமைதான். எத்தனையோ நல்ல கதைகளுடனும் அது தொடர்பான காட்சிகளுடனும் எத்தனையோ இளைய டைரக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்பதுதான் இதில் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிஜம். இது தற்காலிகமான நேரம். இந்நேரம் நிச்சயம் மாறும். கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

---

# கவர்ச்சி என்றால் அழகு என்றே அர்த்தம்!



## சுவலட்சுமி

கவர்ச்சிப் புயல்களுக்கு மத்தியில் எப்படி சுவலட்சுமி சமாளிக்கிறீர்கள்? இப்படி என்னிடம் பலர் கேட்கிறார்கள். கவர்ச்சியை மூலதனமாகக் கொண்டு நான் பட உலகில் நுழையவில்லையே? நான் சினிமாவில் நடிக்க வேண்டும் என்று முடிவெடுத்த போதே கவர்ச்சி என்கிற பெயரில் ஆடைக் குறைப்பு செய்தோ, உடலுறுப்புகளைக் வெளிக் காட்டியோ நடிக்கக் கூடாது என்று முடிவெடுத்து விட்டேன்.

சினிமாவில் கிளமர் என்பது தேவைதான். அதற்காக ஆடைக் குறைப்பு செய்து ஆபாசமாக நடிக்க வேண்டும் என்பதல்ல என்கிறார் சுவலட்சுமி.

மேலும் கவர்ச்சியைக் காட்டி நடித்து சினிமாவில் பணம் சம்பாதித்தாகணும் என்கிற அவசியமோ, தேவையோ எனக்கு கிடையாது.

கல்கத்தாவில் எங்கள் குடும்பம் டீசண்டான குடும்பம். வசதியான குடும்பம். என் அப்பா இஞ்னியர். என் அம்மா என் கூட துணைக்கு இருக்காங்க. கவர்ச்சி என்றால் அழகு என்று தானே அர்த்தம். மற்றவரைக் கவர்வது அழகினால் தான். அதனால் தான் அழகுக்கு கவர்ச்சி என்ற செல்லப் பெயரை காலாவட்டத்தில் சூட்டினார்கள். ஆனால் "கோகுலத்தில் சீதையிலும், லவ் டு டேயிலும்" புடவையில்தான் தோன்றினேன். அழகாக இல்லையா? "ஆசையில்" சில சீன்களில் சுடிதாரில் வந்தேன். சல்வார் கமீசிலும் வந்தேன். டீசண்டான டிரெஸ்கள். அதனால் எனக்கு ரசிகர்களிடமிருந்து எந்தவிதமான முணுமுணுப்பும் வரவில்லை. மாறாக "சுவலட்சுமி நீங்கள் கடிதாரிலும் அழகாக இருக்கிறீர்கள். புடவையிலும் அழகாக இருக்கிறீர்கள்! தயவு செய்து ஆடைக் குறைப்பு செய்யாதீர்கள்" என்றுதான் ரசிகர்கள் எனக்குக் கடிதம் எழுதினார்கள்.

நான் நடித்த முதல் படம் "உத்தரோன்" என்ற வங்க மொழிப்படம். உலகப் புகழ் பெற்ற டைரக்டர் சத்யஜித்ரே தான் என்னை அறிமுகப் படுத்தினார். அவரது அறிமுகம் என்பது நான் பெற்ற பாக்கியம் தானே! அத்தகைய சர்வதேச இயக்குனர் அறிமுகப்படுத்திய நான் கவர்ச்சி என்கிற பெயரில் ஆபாசமாக உடை அணிந்து அலங்கோலமாக நடிக்கலாமா? அது பெரிய பாவமில்லையா?

தமிழில் இதுவரை வஸந்த் சார் டைரக்ஷனில் ஆசை படத்திலும், கோகுலத்தில் சீதையில் அகத்தியன் இயக்கத்திலும், லவ் டு டேயில் பாலசேகரன் இயக்கத்திலும் நடித்தேன். அந்த மூன்று படங்களிலும் நான் சம்பாதித்திருக்கிற நல்ல, கண்ணியமான பெயரை எக்காரணங்கொண்டும் இழக்க மாட்டேன் என்கிறார் சுவலெட்சுமி.

### நடித்து வரும் படங்கள்

"தினந்தோறும்" என்ற படத்தில் முரளிக்கு ஜோடியாக நடிக்கிறேன். ராமராஜனுடன் சத்யத் தாய் என்ற படத்தில் நடிக்கிறேன். லிவிங்ஸ்டனுடன் ஒரு படத்தில் நடிக்கிறேன். இவை எல்லா வற்றிலுமே நல்ல கேரக்டர்கள்தான்! மீண்டும் சொல்கிறேன் கவர்ச்சி என்பதற்கு ஏன் இங்கு விபரீத வியாக்கியானங்கள் கொடுக்கிறார்களோ தெரியவில்லை. கவர்ச்சி என்பது அழகைத்தான் குறிக்கும். கவர்ச்சி உடலமைப்பில் மட்டும்தான் என்பதல்ல. கண்களில் கவர்ச்சி உண்டு. நடை, உடை, பாவனை, புன்னகை எல்லா வற்றிலும் உண்டு.

நான் வீடியோ கேசட்டுகளில் பல பழைய தமிழ் படங்களைப் பார்த்திருக்கிறேன். சாவித்திரி, பத்மினி, அஞ்சலிதேவி ஆகியவர்களின் அற்புதமான நடிப்பாற்றலைக் கண்டு பிரமித்து போயிருக்கிறேன்! அவர்களது அழகின், கண்களின் காந்தக் கவர்ச்சி, நடிப்புக் கவர்ச்சி... இவற்றுக்கு ஈடு இணை சொல்ல முடியுமா சொல்லுங்கள்...?

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# சிந்தனை புரட்சி....!

கே.பி.சாமி,
கோலாலம்பூர்.

மாலை மயக்கும் மந்த காச வேளை, அந்த அறை முழுவதும் மின் விளக்குகளின் ஒளி வெள்ளம் பரவி, இரவுக்கு எதிர் சவால் விட்டுக் கொண்டிருந்தது. தலைக்கு மேலே சுழன்று கொண்டிருந்த மின் விசிரி தென்றலென இளங்காற்றை வீசிக் கொண்டிருந்தது.

இந்த இதமான சூழ்நிலையில், சாய்வு நாற்காலியில் அமர்ந்து முன்னும் பின்னுமாக ஆடிக் கொண்டிருந்தான் மதிவாணன்.

அவன் ஆழந்த சிந்தனையில் வயப்பட்டு இருக்கிறான் என்பதற்குச் சான்று காட்டிக் கொண்டிருந்தன அவன் நெற்றியில் கொடிட்டிருந்த சுருக்கங்கள்.

ஆம்.......!

அவனின் எண்ண அலைகள் எதனையோ எண்ணி அசைப் போட்டுக் கொண்டிருந்தன.

அப்போது......!

"என்னப்பா மதி! ஊரையே பிடிக்கத் திட்டமிடுவதைப் போல பெரிய யோசனையில் ஆழ்ந்து விட்டாய்........!"

குரல் கேட்டு, சிந்தனையில் இருந்து விடுபட்டவனாய் தலை நிமிர்ந்தான் மதிவாணன்.

அங்கு.......!

மதிவாணனின் உற்ற நண்பனான டாக்டர் செல்வராஜ் நின்று கொண்டிருந்தான்.

"வாப்பா.... செல்வராஜ்! இப்படி உட்கார்!" நண்பனை வரவேற்றவாறு வேறென்றுமில்லை நாமப் பேசிய, என்னுடையத் தொழிற்சாலைத் திட்டத்தைப் பற்றிதான் யோசிச்சிக்கிட்டு இருக்கேன்.....!" என்றான் மதிவாணன்.

"ஓ....! அப்படியா....? மதி! நீ அரசாங்க எஞ்சீனியர். தொழிலில் நீ நல்லபேரு பெற்றவன். உன்னுடைய முயற்சிக்கு அரசாங்க உதவி கிடைப்பதில் எந்தவித இடர்பாடுகளும் இருக்காது. இருந்தாலும் உன்னுடைய "பிச்சைக்காரர்கள்" பிரச்னைதான் சற்று யோசிக்க வேண்டியதாக இருக்கிறது....." என்று வார்த்தையை இழுத்து நிறுத்தினான் டாக்டர் செல்வராஜ்.

"செல்வா! என்னுடைய குணாதிசயங்கள் பற்றி உனக்கு நன்றாகத் தெரியும். எதையும் தேவையில்லாமல் பேசமாட்டான். பேசி விட்டால் செய்து முடிக்காமல் விட மாட்டேன்!" அழுத்தம் திருத்தமாகப் பேசினான் மதிவாணன்.

"மதி! உன்னைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால், உன்னுடையத் தொழிற்பேட்டை வழி நாட்டில் உள்ள பிச்சைக்கார்களை முற்றாக ஒழித்து விடமுடியுமா...? அல்லது அந்தப் பிச்சைக்காரர்கள்தான் உன்னுடைய முயற்சிக்கு ஒத்துழைப்பார்களா.....? என்பதுதான் என்னுடையக் கேள்வி!" என்றான் டாக்டர் செல்வராஜ்.

"செல்வா! தோட்டத் துண்டாடல், சிவப்பு அடையாளக்கார்டு, ஆள் குறைப்பு, முதலாளித்துவத்தின் சில சுயநலவாதிகளின் சூழ்ச்சி, இப்படி பல்வேறு சமுதாயக் கோளாறுகளினால் வேலை இழந்து பராரியாய், பஞ்சையாய், நாதியற்றவர்களாய் யாசித்து தெருவோர, ஐந்தடி வாழ்க்கையில் பிச்சை கேட்டு "சீச்சி....! எனும் செல்வச் சிமான்களின் ஏளனத்திற்கு இலக்காகி அவமானச் சின்னங்களாக, உயிரற்றப் பம்பரங்களாகச் சுழன்று கொண்டிருக்கும் பிச்சைக்காரர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் வகையில் எனது எஞ்சீனியர் கல்வியைப் பயன்படுத்தி, எனது கல்வி, ஆற்றல், பொருள் யாவும் அர்ப்பணம் செய்யத் தயாராக இருக்கிறேன்" நீண்ட சொற்பொழிவு செய்ததைப் போல பேசி முடித்தான் மதிவாணன்.

மதிவாணனின் உணர்ச்சி மயமான பேச்சைக் கேட்டு ஒரு கணம் வியர்த்துப் போனான் டாக்டர் செல்வராஜ். மறுகணம், தன்னைத்தானே சுதாகரித்துக் கொண்டு, "மதி! உன்னுடைய முயற்சியை முடக்குவதற்காக நான் கேள்வி கேட்கவில்லை."

"எண்ணித் துணிக கருமம், துணிந்த பின் எண்ணுவோம் என்பது இழுக்கு" என்று வான் புகழ் வள்ளுவன் கூறிச் சென்றுள்ளான்.

"ஆகவே, உன்னுடைய இந்த முயற்சி மிகப் பெரிய முயற்சியாக இருப்பதால் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது என்றுதான் கருதுகிறேன்."

தூர நோக்கான கேள்வியை சாதுர்யமாகக் கேட்டான் டாக்டர் செல்வராஜ்.

"செல்வா! "நீ கேள்வி கேட்பது பொற்கொல்லன் தங்கத்தை உரசிப்பார்ப்பதுப்போல. ஆனால், ஒன்றை மட்டும் தெளிவாகத் தெரிந்து கொள். மயிலே..... மயிலே என்றால் இறகு கிடைக்காது. நாம்தான் முயற்சி செய்ய வேண்டும்.

நாட்டில் பல பகுதிகளில் சிதறிக்கிடக்கும் பிச்சைக்காரர்களைத் திரட்டிக்கொண்டு வந்து தொடங்க விருக்கும் இரும்புத் தொழிற்சாலையில் வேலை கொடுத்து, இரும்பை உருக்கி பல்வேறு கலை அம்சங்களுடன் தயாரித்து அந்த இரும்பின் வடிவத்தை மாற்றுவது போல், பிச்சைக்காரர்களையும் அதன்வழி மாற்றியமைத்து அவர்களும் மனிதர்கள்தான் என்பதை நிலை நாட்டுவதே எனது தலையாய இலட்சியம்.

எனது இந்த இலட்சியம் ஈடேற எனது தந்தையும் முழு மனதோடு, தான் காண்ட்ராக்ட் தொழில் நடத்தி சம்பாதித்தப் பணத்தையும் ஈகைத் தன்மையோடு கொடுக்கவும் வந்துள்ளார். ஆக எனது முயற்சிக்கு எல்லாத் தரப்பிலும் இருந்து நல்லாதரவுக் கிடைப்பதால் எனது முயற்சி வெற்றியடைவது உறுதி."

தேர்ந்த வீணையின் நாதம் போல் குறையின்றிப் பேசிய மதிவாணனின் பேச்சைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போனான் டாக்டர் செல்வராஜ்.

தனையனின் சமுதாய உணர்வு. தந்தையின் புரிந்துணர்வு எண்ணிப் பார்க்கவே டாக்டர் செல்வராஜின் இதயமெல்லாம் இனித்தது.

"தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று பாடினானே அமரகவி பாரதி! அந்தப் பாரதியின் பாட்டிற்கு இலக்கணமாய், மானமுடைய சமுதாயத்தை உருவாக்க, பிச்சைக்காரர்களை ஒழித்திடுவோம் என்று புதியப் பரணி படைக்கப் போகிறார்களா தந்தையும் மகனும்?



மதிவாணன் குடும்பத்தாரின் சிந்தனைப் புரட்சியில் பாரதியின் நிழல் உருவை மானசீகமாக கண்டு ரசித்தான் டாக்டர் செல்வராஜ். அவன் கண்முன்னே ஒரு துருவ நட்சத்திரமாக ஒளிகாட்டி நின்றான்.

அகம் மகிழ்ந்த செல்வராஜ் "நண்பா....! உங்கள் குடும்பத்தை போல, நமது இந்திய சமுதாயத்தில் பொருள் படைத்தவர்கள் நாட்டில் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் எல்லாம் இரை தேடும் பறவைகளாக அங்கும் இங்குமாக நிலை இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உங்களைப் போல் அவர்களும் இந்நாட்டில் மூலதனம் செய்து தொழிற்துறையில் ஈடுபடுவார்களேயானால் இங்குள்ள இந்தியர்கள் பொருளாதாரத் துறையில் ஈடுபடுவார்களேயானால் அவர்கள் வளர்ச்சி அடைவதை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திட முடியாது.

பெரும்பாலானப் பணம் படைத்தவர்கள். இந்நாட்டையே சொந்த நாடாகக் கருதி காலமெல்லாம் உழைக்கின்ற சொந்த இனத்தானையே கண்ணெடுத்தும் பார்க்காமல் அக்கரைப் பச்சையை நாடி ஓடுகின்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

இவர்களுக்கு முன்னுதாரணமாக உங்கள் இரும்புத் தொழிற்பேட்டைக்கு எனது மனப்பூரவமான வாழ்துக்களையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதோடு, என்னால் ஆன எல்லா உதவிகளையும் செய்ய சித்தமாக இருக்கிறேன்" என்று பெருமிதத்தோடு கூறினான் டாக்டர் செல்வராஜ்.

நண்பனின் ஆதரவானப் பேச்சில் உள்ளம் பூரித்துப் போனான் மதிவாணன். பிச்சைக்காரர்கள் புனர் வாழ்வு நிலையம், முதியோர் இல்லம், ஊனமுற்றோர் விடுதி, இப்படி அரசாங்கம் பல கோடி வெள்ளி களை செலவழித்தும், யாசித்து உடல் வளர்த்துப் பழக்கப்பட்டு போய்விட்ட சில சோம்பேறிகளின் மானமற்ற செயல், அரசுக்கு பெரும் தலைவலியாக இருந்து வருகின்ற ஒரு பிரச்னைக்குத் தீர்வுகாணும் வகையில் மதிவாணனின் தொழிற்சாலைத் திட்டம் அமைந்திருப்பதால், அரசாங்கமும் அதற்கு முழு ஆதரவைக் கொடுத்தது.

இதனால், முன்னிலும் உற்சாகமடைந்த மதிவாணன் எறும்பூரக் கல்லும் தேயும் என்பது போல, நாடு பூராவும் அலைந்து, ஆங்காங்கே பிச்சை எடுத்துப் பிழைக்கின்ற பிச்சைக்காரர்களை அணுகி கவர்ச்சிகரமாகப் பேசி தன் திட்டத்திற்குத் தோதாகத் தயார் படுத்திக் கொண்டான்.

ஃஃஃ ஃஃஃ ஃஃஃ

காலை இளம் பருதி வானேக, ஒளி பெற்றுக் கொண்டிருந்தது.

அப்போது!

நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் தொழிற்சாலைக்குப் பிரசித்திப்பெற்ற இடமான சிகாம்புட் பகுதியில் மதிவாணன் இரும்புத் தொழிற்சாலை திறப்பு விழா கோலம் பூண்டு இருந்தது, இன்னும் சிறிது நேரத்தில் நாட்டின் தொழிற்துறை அமைச்சர், மதிவாணனின் இலட்சியக் கனவான பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு அளிக்கும் இரும்புத் தொழிற்சாலையை திறந்து வைக்க வரவிருக்கிறார், இந்தச் செய்தி அந்த வட்டாரம் முழுவதும் பரவி, மக்கள் வெள்ளம் கூடியிருந்தது.

அதோ...!

அமைச்சரும் வந்து விட்டார், கூட்டம் பரபரப்பு அடைகின்றது, மக்கள் அமைச்சரைக் காண முண்டியடித்துக்கொண்டு ஓடுகின்றனர், மதிவாணன் ஓடிச் சென்று அமைச்சருக்கு வரவேற்பு கூறி, திறப்பு விழா பிரதான மேடைக்கு அழைத்துச் சென்று, டாக்டர் செல்வராஜ் துணையோடு தன்னுடைய இரம்புத் தொழிற்சாலை திறப்பு விழா தொடங்குகிறது.

மதிவாணன் வரவேற்புரைக்குப் பிறகு அமைச்சர் பேசத் தொடங்குகிறார். நாட்டின் பிரஜைகள், மதிவாணனை முன்னுதாரணமாகக் கொண்டு இந்த நாட்டிலேயே இது போன்ற தொழிற்சாலைகளை அமைத்து, இந்நாட்டு பிரஜைகளுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கித்தர முன் வருவார்களேயானால் அவர்களுக்கு அரசாங்கம் தன்னால் இயன்ற, ஞாயப்படி செய்யக்கூடிய எல்லா உதவிகளையும் செய்யும்.

மதிவாணனின் இந்த சமுதாயப் பெருநோக்கை வரவேற்கின்றேன், அவருடைய இந்தத் தொண்டுக்காக அரசாங்கத்தின் சார்பில் என் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்து இந்த தொழிற்சாலையைத் திறந்து வைக்கின்றேன் என்று பலத்த கைதட்டலுக்கு இடையே மதிவாணன் இரும்புத் தொழிற்சாலையை அமைச்சர் திறந்து வைக்கிறார்.

எதிர்காலத் தலை மைத்துவத்தின் மேல் அவன் கொண்ட நம்பிக்கையும், வாழத் துடிக்கின்ற நெஞ்சங்களை வாழ வைத்து விட்ட வெற்றியும் அவ னுக்கு மேலும் எதைஎல்லாமோ செய்யச் சொல்லிக் கொண்டிருக்கின்றன போலும், மதிவாண னின் கண்கள் அங்கே திரண்டிருந்த கூட்டத்திலியே நிலைத் திருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



**மனிதனுக்கு உடலில் கழிவு வேலைகள் சரியாக நடந்து கொண்டே இருக்க வேண்டும். சில சமயம் மலம் சிக்கல் அடைவதை காண்கிறோம். இதேப் போல் சிறுநீரும் சிக்கல்பட்டு விடுகிறது. இதற்கு சிறுநீர் அடைப்பு என்று சொல்லுகிறோம். இது மலச்சிக்கலை விட அபாயகரமானதாகும்.**

## டாக்டர் பி. பி. அண்ணாவின் பொன்மொழிகள்



காலம் பொன்னானது கடமை கண்ணானது. எனவே தொழிலாளர்கள் காலத்திற்கு ஏற்றவாறு தங்களை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். இந்த நவீன யுகத்திற்கு ஏற்றவாறு தயார் படுத்திக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.. நேரத்தையும் காலத்தையும் வீட்டுவிட்டு பிறகு வருந்துவது ஏற்புடையதாக இருக்காது. நாம் எதை செய்தாலும் அதை முறையாக செய்ய வேண்டும். அந்த சமூகம் வெற்றி பெறும்.

# சிறு நீரகக் கோளாறும் இரத்த சோகையும்..!

சிறுநீர் தடைபட்டால் சிறுநீர் வெளியாகாமல் அடி வயிறு பெருக்கும். அடிவயிற் றில் வீக்கம் ஏற்பட்டு இந்த வீக்கமானது வயிறு முழுவதும் பரவும், தாளாத வலியும் கொடுக்கும். சிலருக்கு பாதம், முகம் முதலிய இடங்களில் வீக்கம் காணலாம். பெரு மூச்சு, இரைப்பு ஏற்படும் சரியான சிகிச்சை அளிக்காவிட்டால் மரணம் ஏற்படும்.

காரணம், உப்பு உடம்பில் அதிகம் கலந்து உள்உறுப்புகளில் படிந்து அடைப்பாலும் சிறுநீரக கோளாறுகளும்' அடைப்பும் ஏற்படலாம். சிபிலிஸ் (பாலுணர்வு நோய்) நோயால் பாதிக்கப்பட்டு அதனால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு இதன் விளைவாலும் சிறுநீர் அடைப்பு ஏற்பட நீடித்த நோயின் காரணமாக இரத்தக் குறைவு ஏற்பட்டு உடல் சோகையாகி சிறுநீர் அடைப்பு ஏற்படலாம்.

### கல் அடைப்பு

சிறுநீரகத்தில் சிலருக்கு சிறுகற்கள் ஏற்படுவதுண்டு, இதற்கு கல்லடைப்பு என்கிறோம். இவ்வித கல் அடைப்பு ஏற்பட்டால் சிறுநீர் அடைப்பு ஏற்பட்டு, உடல் வீக்கமும் வலியும் ஏற்படும். இந்நோய் உண்ணும் உணவின் முழு காரணத்தாலும் சிறுநீரகக் கோளாரினாலும் ஏற்படுகிறது.

சிலருக்கு சிறுநீர் வழியாக மணல் போன்றும், சிறுசிறு கற்கள் வெளியாகும்போது குத்தல் வலியுடனும் வெளியாகும்.

மது போன்ற போதை பொருள்களை அதிகம் பயன்படுத்துவதாலும் அதிக கொழுப்புள்ள உணவு உட்கொள்வதாலும் அளவுக்கு மிஞ்சிய உடலுறவுகளாலும் அதிக மனக்கவலையாலும் இந்நோய் ஏற்படலாம்.

இந்த கற்கள் மணல் போல வெளியாகும்போது நீர்த் தாரையில் குத்தல், வலி, எரிச்சல் ஏற்படும் சிலருக்கு சிறுநீர் தடைப்பட்டு அடி வயிற்றில் தாங்க முடியாத வலி ஏற்படும்.

### சொட்டு மூத்திரம்

சொட்டு மூத்திரம் என்பது சிறயவர் முதல் பெரியவர் வரை ஆண் - பெண் எல்லோருக்கும் வரும் நோயாகும். சிறுநீரானது எல்லோருக்கும் அறிவியல் நீர் வீழ்ச்சியில் நீர், பீறிட்டு ஓடுவது போல் தட்டு தடங்களின்றி பீறிட்டு ஓட வேண்டும். அப்படியின்றி சொட்டு சொட்டாக சொட்டி கொண்டே இருப்பதை சொட்டு மூத்திரம் என்கிறோம். பெரியவர்களானால் இது ஒரு பெரிய சங்கடமான நிலைதான். துர்நாற்றம் வீசும், வேறுவித தொழிலில் ஈடுபட முடியாது. அதிக அசதியுடன் அருவருப்பும் ஏற்படும்.

காரணம்: குழந்தைகளுக்கு சீரண கோளாறுகளாலும் வயிற்றில் கிருமிகள் தொல்லைகளினாலும் நீண்ட நாளைய வயிற்று போக்கின் காரணமாக குழந்தை பலவீனம் ஏற்பட்டும், இதனால் சொட்டு மூத்திரம் ஏற்படலாம்.

பல பெண்களிடம் தொடர்பு கொள்வதாலும் வெட்டை நோய் பற்றி அதனாலும் பெரியவர்களுக்கு ஏற்படலாம்.

இனிப்பு அதிகம் சாப்பிடுவதாலும், இந்நோய் ஏற்படலாம்.

### நோய் நீங்க சிகிச்சை

அதிக இனிப்பு சாப்பிட்டதினால் ஏற்பட்ட சொட்டு மூத்திரமாயின் ஆசிட்பாஸ்.

பெண்களுக்கு: காந்தாரிஸ், முதியவர்களாயின்: செல்சிமியம். எரிச்சல் வலியுடன் சொட்டு மூத்திரமாயின் அபிஸ்மெல்லியா.



அறுவை சிகிச்சை இல்லாமலேயே சிறுநீரிலிருக்கும் கற்களை கறைய வைக்கும் சக்தி வாய்ந்ததும் சகல வடிவமான கற்களையும் கறைத்தெடுத்து விடும் அற்புத சக்தி வாய்ந்தது. தலப்சிபுர்சா பெக்டோரிஸ் எனும் மருந்தை தாய் திரவமாகக் கொடுக்கலாம். இத்துடனே காந்தாரிஸ், தெரிபிந்தினா, பெட்ரோசெலினம் முதலிய மருந்துகளையும் குறிகளுக்கு ஏற்றவாறு கொடுத்துடலாம். நோய் நீக்கிக் கொள்ளலாம்.

மனிதர்களுக்கு இரத்த குறை என்பதற்குத்தான் சோகை என்கிறோம். ஒருவருக்கு இரத்தம் குறைவதற்கு எத்தனையோ காரணங்கள் கூறலாம். நீண்ட நாளைய நோய்க்குப் பின் இரத்தக் குறைவு ஏற்படலாம். நல்ல உணவும், சத்தில்லாத ஆகாரத்தினாலும், ஏழ்மையின் காரணத்தினாலும் இரத்த சோகை ஏற்படலாம்.

### சோகைகளுக்கு ஹோமியோ சிகிச்சை

நல்ல உணவும், சத்தில்லாத ஆகாரத்தினாலும், ஏழ்மையின் காரணத்தினாலும் இரத்த சோகை ஏற்படலாம். சில பெண்களுக்கு உடனுக்குடன் மாதவிடாய் போக்கினாலும், இரத்த சோகை ஏற்படலாம். மாத கணக்கில் போகும் வயிற்றோட்டம் அல்லது சீதபேதி இவைகளாலும், இரத்த சோகை ஏற்படலாம். மண், சாம்பல் சாப்பிடும் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் கல்லீரல் கெட்டு இரத்தம் கெட்டு இவைகளினாலும் இரத்த சோகை ஏற்படலாம்.

சோகையாய் உள்ளவர்கள் உடல் வெளுத்து காண்பார்கள். கண்ணில் நல்ல ஒளி இருக்காது. கண் வெண்மையாக இருக்கும். சிலர் மெலிந்தும் இருப்பார்கள். இவர்களின் உதடு, முகம், கை, கால்கள் அனைத்தும் வெளுத்திருக்கும் இவர்களுக்கு மூச்சுத் திணறல் இருக்கும். நடந்தால் இறைக்கும். இவர்களால் எந்த வேலையும் செய்ய இயலாது. இவர்கள் அதிக தூரம் நடந்தால் களைப்பு, இறைப்பு, இருதய படப்படப்பு, மயக்கம் போன்றவைகள் ஏற்படும். சோகையாய் இருப்பவர்களுக்கு சுறுசுறுப்பே இருக்காது. இவர்களுக்கு உடம்பில் வலி, களைப்பு இருந்து கொண்டே இருக்கும். இவர்களுக்கு நுரையீரல் சரியானபடி வேலை செய்யாததால் உண்ணும் உணவும் சரியாக சீரணிக்காது. பெரும்பாலும் இவர்களுக்கு வயிற்றோட்டம் இருந்து கொண்டே இருக்கும். சிலருக்கு அடி வயிறு, கால், முதலிய இடங்களில் லேசான வீக்கமிருக்கும் முழு சோகை என்பவருக்கு உடல் முழுவதும் வீக்கமிருக்கும் இவர்களுக்கு சரியானபடி சிறுநீர் வெளியேராது. சில சோகை நோயாளிகள் அடிக்கடி சிறுநீர் கழித்துக் கொண்டே இருப்பார்கள்.

சோகை உள்ள பெண்களுக்கு சரியானபடி மாதவிடாய் போக்கு இருக்காது.

சில பெண்களுக்கு முதல்நாள் குறைவாக கண்டு நின்று விடும். சில பெண்களுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறையும் வரலாம்.

சிலருக்கு மாத விடாயே இராது. இவர்களின் அடிவயிறு பெருத்தும் விடும்.

இவர்கள் இயற்கை உணவாகிய காய், கனி வகைகளை நாளும் சாப்பிட்டு வந்தால் சோகை நோயை விரட்டலாம்.

படிப்பகம்

www.padippakam.com



# சமைத்து தான் பாருங்களேன்!

## தேங்காய் கொழுக் கட்டை



தேவையானவை:
முற்றிய தேங்காய் - 2
வெல்லம் - 500 கிராம்
ஏலக்காய் - 4
அரிசி - 500 கிராம்

செய்முறை:

அரிசியைச் சுத்தம் செய்து ஊற வைத்து வடிய வைத்து மாவாக இடிக்க வேண்டும். இடித்த மாவை சலித்து ஒருமணிநேரம் வெள்ளைத் துணியில் போட்டு நிழலில் உலர்த்த வேண்டும் வாயகன்ற ஒரு பாத்திரத்தில் தேவையான தண்ணீர் விட்டு அடுப்பில் வைக்க வேண்டும். தண்ணீர் கொதிக்கும் பொழுது மாவை அதிகம் போட்டு கட்டி தட்டாமல் நன்றாகக் கிளறி இறக்கி வைத்து கால்மணி நேரம் மூடிவைக்க வேண்டும்.

தேங்காயை பூவாக துருவ வேண்டும். ஒரு பாத்திரத்தில் ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து நீர் கொதிவரும் பொழுது வெல்லத்தை போட வேண்டும். கொஞ்சம் பாகானவுடன் தேங்காய்த் துருவுலைப் போட்டு சுருளக் கிளற வேண்டும் இதுவே தேங்காய் பூரணம். உள்ளங்கையில் நல்லெண்ணெயை தடவிக் கொண்டு மாவை நன்றாகப் பிசைந்து சிறு உருண்டைகளாக்கிக் கொள்ள வேண்டும். உருண்டையைத் தட்டையாக்கி மெல்லியதாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யப் பட்ட மாவு வட்டத்தின் நடுவில் ஒரு தேக்கரண்டி பூரணத்தை வைத்து மாவு வட்டத்தில் முனைகளை ஒன்றாக இணைத்து கொழுக் கட்டையாகப் பிடிக்க வேண்டும். இவ்வாறு தயாரிக் கப்பட்ட கொழுக்கட்டைளை இட்லிச் சட்டியில் வைத்து நீராவியில் வேக வைத்து எடுக்க வேண்டும்.



## தேங்காய் பால் கொழுக் கட்டை

பச்சரிசி அரைகிலோ,
தேங்காய் 1,
சீனி 300 கிராம்,
ஏலக்காய் சிறிதளவு,
உப்பு சிறிதளவு.

செய்முறை:

பச்சரிசியை தண்ணீரில் ஊற வைத்து சிறிது உப்புச் சேர்த்து அரைத்து கெட்டியான மாவாக எடுத்து ஒரு அங்குல நீள வாட்டில் உருட்டிக் கொள்ள வேண்டும். தேங் காயைத் துருவி அதில் வெந்நீர் விட்டு கெட்டியாகப் பால் பிழிந்து வடிகட்டிக்கொள்ள வேண்டும். அதில் சீனியையும் ஏலக்காயையும் போட்டுக் காய்ச்சி தயாரித்துள்ள கொழுக் கட்டை களை அதில் போட்டு கிளறி விட்டு மூடி 2 மணி நேரத்திற்குப் பிறகு உபயோகப்படுத்த வேண்டும்.

# ஒரு முன்னாள் மனைவி... இந்நாள் காதலி ஆகிறார்!



கிரேகாவுடன் மண்டேலா

வின்னியை விவாகரத்து செய்த பிறகு நெல்சன் மண்டேலா, கிரேகா மாசெல் என்ற பெண்மணியுடன் நெருங்கிப் பழகி வருகிறார்.

தென்னாப்பிரிக்காவின் அதிபராக இருக்கும் நெல்சன் - கிரேகா காதல் பிரபலமாகிப் போனதாலோ என்னவோ, தங்களின் நெருக்கத்தைப் பலரும் அறிய வெளிப்படையாகவே காட்டி வருகிறார்கள்.

சமீபத்தில் லண்டனில் அரசி எலிசபெத்தைக் காணச் சென்றிருந்த நெல்சன் மண்டேலா, கிரேகாவையும் உடன் அழைத்துச் சென்றிருக்கிறார்.

கிரேகா என்பவர் வேறு யாருமல்ல, 1986ல் விமான விபத்தொன்றில் இறந்து போன மொஸாம்பிக் அதிபர் சமோரா மாஷலின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்கு வயது 52.

மண்டேலா - கிரேகா காதல் மிக வெளிப்படையாகவே தெரிய வந்தாலும், புது கதை ஒன்றை இப்போது கூறி வருகிறார் கிரேகா.

மண்டேலாவை திருமணம் செய்துகொள்ள மாட்டாராம். நெல்சனிடம் எனக்கிருக்கும் பந்தம் - சிநேகிதம் - காதல் உண்மையானதுதான். அதில் சந்தேகமில்லை.

ஆனால், திருமணம் செய்து கொள்வதாக உத்தேசம் இல்லை.

காலஞ் சென்ற சமோரா வின் மனைவி என்று அழைக் கப்படவே எனக்கும் விருப்பம் என்கிறார் கிரேகா.

காதல் எப்படி எல்லாம் விளையாடுகிறது என்பதை பார்த்தீர்களா....!

காதலுக்கு கண்ணில்லை காதில்லை என்பது மட்டு மல்ல, உறவுமில்லை என்பது உண்மையாகிறதோ...!


## சங்கமணி

### சந்தாதாரர் மனுபார விண்ணப்பம்

அன்புடையீர், வணக்கம்
சங்கமணி வார இதழுக்கு சந்தாதாரராக நான் விருப்பம் தெரிவிப்பதுடன், இத்துடன் என் விபரத்தையும் குறிப்பிட்டுள்ளேன்.

பெயர் :....................................................................

அ.கா. எண் :....................................................................

முகவரி :....................................................................

....................................................................

....................................................................

வேண்டிய இதழுக்கு ( ✓) இக்குறியிடவும்

| 12 இதழ் RM6.00 | ☐ | 24 இதழ் RM12.00 | ☐ | 52 இதழ் RM26.00 | ☐ |
|---|---|---|---|---|---|

போஸ்டர் ஆர்டர் எண் / மணி ஆர்டர் எண்: ..................................... .....

குறிப்பு: 1) காசோலை மற்றும் ரொக்கம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2) சந்தாதாரர்கள் தங்கள் பெயர் மற்றும் முகவரியை சரியான முகவரியாக தருவதுடன் அவை ஆங்கிலத்தில் எழுத்தப்பட்டிருக்க வேண்டும்.
3) போஸ்டர் ஆர்டர் மற்றும் மணி ஆர்டரில்
NATIONAL UNION OF PLANTATION WORKERS
என்று இடம் பெற்றிருக்க வேண்டும்.

மனுபாரம் அனுப்பவேண்டிய முகவரி:

N.U.P.W.
P.O.BOX 73,
46700 PETALING JAYA
SELANGOR D.E.


படிப்பகம்

www.padippakam.com



# மனிதத் தவறுகளே விபத்துக்குக் காரணம்
# உங்கள் பாதுகாப்பே உங்களுக்கு முக்கியம்
# பாதுகாப்புடன் வேலை செய்ய எச்சரிக்கை தேவை



**Selepas menyembur, cuci semua peralatan serta pakaian kerja.**

**噴射工作後，必須冲洗噴射器及徹底洗清潔自己身體和工作衣服。**

மருந்து தெளிப்பு வேலை முடிந்தபின் நன்றாக குளிக்க வேண்டும். அத்துடன் தெளிப்பானையும், உடைகளையும் நன்றாக கழுவ வேண்டும்.

ccm **Bioscience** ®

படிப்பகம்

www.padippakam.com



# இழப்பீடு பெறப்படும் போது.... தொழிலாளர்களுக்கு ஒன்றும் பொறுப்பாளருக்கு ஒன்றும் பராபட்சம் கூடவே கூடாது!

## தொழிலியல் உறவு - விளக்கம்



தொகுப்பு: இரா.பொ.

உயர் பதவிகளில் இருக்கும் ஒருவர் அல்லது ஒரு துறைக்கு பொறுப்பாளியாக இருக்கும் ஒருவர், தாம் சார்ந்துள்ள துறையில் இருக்கும் சக தோழர்களுடனோ, அல்லது கீழ் நிலையில் இருக்கும் தொழிலாளர்களுடனான உறவில் கவனம் செலுத்துவது அவசியமாகிறது.

நமது நடவடிக்கைகள் சரியானதாக அமையவில்லை என்றால், நாம் எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்தாலும் அவர்களின் மத்தியில் பெயர் போட முடியாது. அதே வேளையில் சுயநல நோக்கம் இல்லாமல் நடுநிலையாக நடந்து கொள்வாரேயானால் அவர் எல்லோராலும் மதிக்கப்படுவார் என்பது திண்ணம்.

பராபட்சமின்றி, ஒரு பிரச்னையை எந்த தரப்புக்கும் சாதகமின்றி, நடுநிலையாக நியாயமாக தீர்ப்புகள் வழங்கும் போது அது வயலுக்கு இரைத்த நீராக எல்லாருக்கும் போய் சேரும்.

இதையொட்டி ஒருசம்பவம் தொடர்பாக இங்கே அலசப்படுகிறது.

தொழிற்சங்க பொதுச் செயலாளர் உட்பட அவருடன் சக 68 தொழிலாளர்களும் ஆட்குறைப்பின் போது நிறுத்தப்பட்டனர். அந்த தருணத்தில் தொழிலாளர்களின் சார்பாக பேச்சுக்கள் நடத்தி, ஒப்பந்தம் செய்யப்பட்ட வகையில் 68 தொழிலாளர்களுக்கு இழப்பீடு பெற்று கொடுத்தார்.

அப்போது, அந்த தொழிற்சங்க பொதுச் செயலாளருக்கு இழப்பீட்டுத் தொகையாக மற்ற 68 தொழிலாளர்களை விட பல மடங்கு அதிகமாக நிர்வாகம் அவருக்கு வழங்கியது.

அந்த 68 தொழிலாளர்களுக்கு ஒப்பந்தத்தில் கண்டுள்ளது படி ஆட்குறைப்பு சகாய நிதியாக வருஷத்திற்கு தலா ஒன்றரை மாதம் சம்பளமாக வழங்கப்பட்டது. ஆனால் அந்த பொதுச் செயலாளருக்கு நிர்வாகம் அளவுக்கு அதிகமாகவே வழங்கியது.

அவருக்கு வழங்கப்பட்ட தொகை 4 லட்சத்து 25 ஆயிரம் வெள்ளியாகும்.

இதை கேள்வியுற்ற சக தொழிலாளர்கள், தங்களுக்கு வழங்கப்பட மற்றும் அந்த பொதுச் செயலாளருக்கு வழங்கியுள்ள இழப்பீடுகளில் பராபட்சம் காட்டப்பட்டுள்ளது என்று ஆதங்கம் கொண்டனர்.

பின்னர் அந்த ஆட்குறைப்பு சகாய நிதியில் திருப்தி அளிக்கவில்லை என கருதி, வேலை நீக்கம் முறையற்றது என்று காரணம் கூறி சம்பந்தப்பட்ட 68 தொழிலாளர்களும் மனித வள அமைச்சருக்கு புகார் கொடுத்தனர். பின்னர் அந்த பிரச்னையை தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பினார்.

தொழிலாளர்கள் தரப்பில், கொடுக்கப்பட்ட புகார் மனுவில், கீழ் கண்ட சாரம் சங்களை முன்வைத்தனர். அவைகள் வருமாறு:

தங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு விகிதத்தில் பராபட்சம் காட்டப்பட்டதாகவும், வேலை நீக்கம் முறையற்றது எனவும், நிர்வகாம் வழங்கிய இழப்பீட்டு சகாயா நிதி, முறையாக - நேர்மையாக - நல்ல எண்ணத்துடன் வழங்கப்படவில்லை எனவும், தொழில் உறவு சட்டத்தின் அடிப்படையில் இவை வழங்கப்படவில்லை எனவும் கூறியும், அந்த பொதுச் செயலாளருக்கு எந்த அடிப்படையில் இழப்பீடு வழங்கப்பட்டதோ? அந்த வகையில் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கையை முன்வைத்தனர்.

நிர்வாகம் தமது பதில் அறிக்கையில், எல்லா முடிவும் முறையே தொழிற்சங்கத்தில் பேசப்பட்டு எடுக்கப்பட்டது என்றும் இதில் எந்த பராபட்சமும் காட்டவில்லை எனவும். அந்த பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்ட தொகையானது, நியாயமான தொகை என்றும் அவரின் நற்சேவை மற்றும் நீண்ட நாள் வேலை செய்தவர் என்ற அடிப்படையிலும் அவர் பொறுப்பில் இருந்த காலத்தில் நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கத்திற்கு நீடித்த தொழிலியல் நல்லுறவுக்காகவும் அந்த தொகை வழங்கப்பட்டதாகவும் காரணம் தெரிவித்தனர்.

எனினும் இப்பிரச்னை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வராமலேயே பேச்சு வார்த்தையின் அடிப்படையின் சுமூகமாக பேசி தீர்க்கப்பட்டது. இந்த சுமூக பேச்சு வார்த்தை தொழில் நீதிமன்ற தலைவர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த பிரச்னை சுமூகமாக தீர்க்கப்பாட்டாலும் கூட நீதிபதி தமது இணை தீர்ப்பில் கூறியதாவது:-

கொடுக்கப்படுகின்ற எந்தவொரு இழப்பீடுகளிலும் பராபட்சம் காட்டப்பட கூடாது. பொது செயலாளர் என்பவர் ஒரு இயக்கத்தை வழி நடத்தக் கூடியவர், தொழிலாளர்களின் பால் அக்கறை கொண்டவர் என்பதால் அவர் பராபட்சமாக நடந்த கொள்ளக் கூடாது. மேலும் அவர் நிர்வாகத்திற்கு சாதகமாக இருப்பாரேயானால், தொழில் உறவு மீறப்பட்டு தொழிற்சங்கத்தின் உண்மையான நோக்கங்கள் சிதைந்துவிடும் என்றும் குறிப்பிட்டார். இதை கருத்தில் கொண்டு பொதுச் செயலாளருக்கு தொழிலாளிக்கும் இடையேயான இழப்பீடு வேறு பாடுகள் முரண்பாடுகள் களையபட வேண்டுமென்றார்.

# நிர்வாகத்திடம் அனுமதி கேட்டு வெளியேறும்போது விபத்தில் சிக்கிக் கொண்டால் என்ன நேரிடும்..?!

## சொக்சோவின் தீர்ப்பும் விளக்கமும்!

வேலை நேரத்தின் போது எத்தனையோ விபத்துகள் ஏற்படுவது வாடிக்கையாகி விட்டது உண்மை. ஆனால். துரதிர்ஷ்டவசமாக ஒரு கம்பெனியில் வேலை செய்யும் போது... அவசர வேலையாக நிர்வாகத்திடம் கொஞ்ச நேரம் டைம் ஆப் கேட்டு விட்டு போகும் போதோ அல்லது திரும்பவும் வேலைக்கு திரும்பும் போதோ விபத்து ஏற்படுமானால் என்ன ஆகும்.

சொக்சோ சட்டம் என்ன சொல்கிறது என்று ஆராய்வதற்கு முன்பு, இது போன்ற சம்பவங்கள் நம்மில் பலருக்கு அல்லது தெரிந்த நண்பர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம்.

இடைவேளை கேட்டு போகும் போது, நிர்வாகத்திடம் சொல்லி விட்டு போவது எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த கண்ணோட்டத் தைப் பார்த்தால் பலருக்கு இது பயன் உள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

வேலைக்கு போய்விட்டு பாதியிலேயே மட்டம் போட்டு திரும்பும் எத்தனையா சம்பவங்களை நம் கண் கூடாக பார்க்கிறோம். இதுபோன்ற ஆரோக்கிய மற்ற செயல்களால் யாருக்கு நஷ்டம் என்பதை சிந்தித்துப் பார்த்தால் நன்மை பயக்கும்.

சரி நேரே விஷயத்திற்கு வருவோம்....

கெடாவில் உள்ள ஒரு தொழிற்சாலையில் சூப்பர் வைசராக வேலை பார்த்து வந்தார் ஒருவர். அவரது அன்றாட வேலை நேரம் காலை 7.00 முதல் பிற்பகல் 3.00 மணி வரையாகும்.

கடந்த 1994ம் ஆண்டு அக்டோபர் 30ம் தேதியன்று வழக்கம் போலவே தமது மோட்டாரில் வேலைக்கு போனார்.

தாம் வேலை செய்யும் தொழிற்சாலையில் நுழைந்த சற்று நேரத்திலே அவருக்கு வீட்டில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. பிள்ளைக்கு கடுமையான காய்ச்சல் என்று தகவல் வரவே, அவரும் நிர்வாகத்திடம் முறைப்படி தமக்கு இரண்டு மணி நேரம் அனுமதி வேண்டும். தமது பிள்ளையை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கேட்டு கொண்டதன் விளைவாக அவருக்கு இரண்டு மணி நேர டைம் ஆப் கிடைத்தது.

மருத்துவமனைக்கு குழந்தையை அழைத்துச் சென்று சிகிச்சை பெற்றுவிட்டு, மறுபடியும் வீட்டில் குழந்தையை விட்டுவிட்டு வேலைக்கு திரும்பும் வேளையில் விபத்துக்குள்ளானார். அவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் இன்னொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் கடுமையாக காயமுற்றார்.

இந்த விபத்தினால் சம்பந்தப்பட்ட நபர் தமது வலது காலின் நடுவிரலை இழந்தார். மேலும் 32 நாட்கள் மருத்துவ விடுமுறையில் இருந்தார். தமக்கு நேர்ந்த விளைவு விளக்கியும் தற்காலிக இழப்பீட்டு அனுகூல தொகையை பெற சொக்சோ வாரியத்திடம் முறையாக விண்ணப்பத்தார்.

இதற்கிடையே தமது விபத்து குறித்து, விபத்தின் விளைவால் என்ன என்ன இழக்க நேரிட்டது என்பது. குறித்தும் சொக்சோ மருத்துவ வாரியத்திடம் முறையே விண்ணப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது. மருத்துவ வாரியமும் அவரது கோரிக்கையை ஏற்றும் அவருக்கு நிரந்த இழப்பீடாக 3 விழுக்காட்டு இழப்பீடு பெற அனுமதி கிடைக்கப் பெற்றார்.

எனினும் சொக்சோ வாரியம் இதை நிராகரித்ததுடன் இது வேலை நேரத்து விபத்து அல்ல என்று கூறியதைத் தொடர்ந்து,

மனுதாரர் சொக்சோ மேல் முறையீட்டு வாரியத்திடம் முறையீடு செய்தார்.

மேல் முறையீட்டு வாரியம் தனது தீர்ப்பில்,

சம்பந்தப்பட்ட நபர் முறையாக நிர்வாகத்திடம் டைம் ஆப் கேட்டிருக்கிறார் என்பதில் எவ்வித சந்தேகமில்லை. அதே வேளையில் அவர் கேட்டுக் கொண்டது படி இரண்டு மணி நேரத்தில்தான் இந்த விபத்தும் நடந்திருக்கிறது. எனவே அவர் வேலைக்கு வரும் வேளையில் தான் இது நேர்ந்திருக்கிறது என்பதால், இது வேலை நேர விபத்துதான் என்று கருதிவிடலாம்.

அதோடு சம்பந்தப்பட்ட நபர் ஒரு பொறுப்புள்ள நபர் என்பதோடு, அவர் வேலைக்கு மட்டம் போட்டோ அல்லது நிர்வாகத்திடம் தெரிவிக்கமலோ செல்லவில்லை. முறையே அனுமதி கேட்டுத்தான் சென்றிருக்கிறார் என்பது புலனாய்கிறது என்று தனது தீர்ப்பில் சொக்சோ மேல்முறையீட்டு வாரியம் தீர்ப்பளித்ததுடன் அந்நபருக்கு இழப்பீடு வழங்கவும் உத்தர விட்டது.

www.padippakam.com







# கருணைக் கரம் கண் மூடியதே!

**செப்டம்பர் 5, 1997! உலகம் எங்கும் உள்ள கோடிக் கணக்கான மக்களை மீளாத் துயரில், கண்ணீரில் நனைய வைத்த நாள்!**

தன் வாழ்நாள் முழுவதையும் ஏழை எளியோருக்கும் ஆதரவற்றோருக்கும் அர்ப்பணித்து அன்பு - பரிவு - கனிவு என்று வாழ்ந்த ஒரு "கருணை தாய்" தனது இறுதி மூச்சை நிறுத்திக் கொண்ட நாள்.

ஆம்! அன்னை திரேசாவின் மரணம் உலகெங்கும் நாடு - இனம் மதம் என்ற எல்லா எல்லைகளைக் கடந்த எல்லோரையும் அழ வைத்தது.

உலகின் மிக ஏழ்மையான நகரங்களில் ஒன்று என வர்ணிக்கப்படும் இந்தியாவின் கல்கத்தாவில் இருந்து வாழ்வில் நலிந்தோருக்கும் தொண்டு செய்வதையே தன் வாழ்நாள் பணியாகக் கொண்ட ஒரு தூய உள்ளம் துயில் கொண்டது.

அன்னை திரேசா கடந்த 1910 ஆகஸ்ட் 26ம் தேதி அல்பேனியாவில் ஸ்கோப்ஜி என்ற ஒரு சிற்றூரில் பிறந்தார்.

கடந்த 1928ம் ஆண்டு இந்தியாவின் கல்கத்தா நகரில் ஒரு கன்வென்டில் சேரவே அவர் இந்தியாவுக்கு வந்தார்.

அது- வெள்ளையர்களின் ஏகாதிபத்தியம் உச்சத்தில் இருந்த நேரம். வெள்ளையர்களுக்கு என்று தனி மவுசு இருக்கிறது என்றும் அவர்களுக்கு - அந்த இனத்திற்கு என்று தனி அந்தஸ்தும் மரியாதையும் உண்டு என்று வெள்ளையர்கள் கர்வமும் பெருமையும் கொண்டிருந்த காலம்!

அதிலும் ஆசிய நாட்டவர்கள் என்றால் அவர்களுக்கு இயல்பாகவே ஏகப்பட்ட இளக்காரம். ஏளனமும் ஏகாடியமும் செய்வது அவர்களின் வேடிக்கை மட்டுமல்ல அது அவர்களின் வாடிக்கையும் கூட. இப்படிப்பட்ட வறுமை காலகட்டத்தில் இந்தியாவுக்கு வந்த அன்னை திரேசா அங்கு தாண்டவமாடிய வறுமையை கண்டு மனம் கலங்கினார்.

வீதியில் படுத்துறங்கும் வீடில்லாத ஏழைகள், குழந்தைகள், அனாதைகள் ஆதரவற்றவர்களைக் கண்டு பரிதவித்த அந்த நெஞ்சம் அவர்களுக்காகவே ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்து 1946ம் ஆண்டில் ஆதரவற்றோருக்காக ஒரு சிறு சமூக இல்லத்தை நிறுவினார்.

அதுதான் அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பு முனை. அது முதல் ஏழைக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

அவர் தொடங்கிய அந்த ஆசிரமம்தான் காலப் போக்கில் மகத்தான மாபெரும் அறப்பணி இல்லமாக மாறியது. பெற்றோர்களை இழந்த குழந்தைகள், அனாதைகள், அங்கவீனர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் இப்படி வாழ்வில் துன்பப்பட்டு தவிக்கின்ற மக்களின் கண்ணீரை துடைக்கும் "கருணாக் கரமாக" அவர் மாறினார். அவரின் சேவை இந்தியாவின் மூளை முடுக்கெல்லாம் பரவியதோடு, பிரதிபலன் பாராது அவர் செய்து வந்த தொண்டு உலகம் முழுவதும் பரவியது.

இந்தியாவின் எல்லா பகுதிகளிலும் தமது ஆசிரமத்தின் கிளைகளை நிறுவி, இந்த அறப்பணிக்காக தங்களை தியாகம் செய்கின்ற தியாகச் சுடர்களை, ஊதியம் கருதாது ஊழியம் செய்கின்றவர்களை உருவாக்கினார்.

எங்கோ எந்த இனத்திலோ பிறந்தவர்தான். ஆனால், இந்திய தேசத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அவர் கடந்த 1948ம் ஆண்டு இந்தியப் பிரஜையாகவே தன்னை மாற்றிக் கொண்டார்.

ஏழை மக்களிடம் கொடுப்பதற்கு என்ன இருக்கிறது? அவர்களின் அன்பைத் தவிர...! எதுவுமே எதிர்பார்க்க முடியாத சூழ்நிலையில் அந்த மக்களுக்காக அவர்களின் உயர்வுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் அன்னை திரேசா!

தனக்குப் பிறகும் தனது சேவை தொடர வேண்டும் என்பதற்காகவே அடிப்படை வகுத்து செயல்பட்ட பேருள்ளம் படைத்த அன்புத் தாய் அவர். எழுதி வைத்துக் கொண்டு அதன்படி நடக்கச் செய்தவர் அல்ல - சட்டங்களாலும் உத்தரவுகளாலும் காரியங்களை ஆற்றியவர் அல்ல... பதினெட்டு வயது பருவ மங்கையாக இந்தியாவில் காலடி எடுத்து வைத்த அன்னை திரேசா ஆற்றிய அரும்பணிகளை அவர் வாழ்ந்த நாடும், அவரை மதித்த உலகமும் மறக்க முடியாது.

## பரிசுகள் விருதுகள்

கடந்த 1971ம் ஆண்டில் பேப்பாண்டவரின் அமைதிப் பரிசு இந்த அன்னைக்கு வழங்கப்பட்டது. உலகம் போற்றும் "நோபல்" பரிசு இந்த பாசக் குயிலுக்கும் கடந்த 1979ம் ஆண்டு வழங்கப்பட்டது. 1980ம் ஆண்டில் இந்தியாவின் உயரிய விருதான பாரத் ரத்னா விருது இவருக்கு வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

பிலிப்பைன்சின் உயரிய விருதான மாக்சாசே விருதும் இந்த அன்னைக்கு மகுடமாக சூட்டப்பட்டது. மலேசிய தொழிற்சங்க முன்னோடியான டாக்டர் பி.பி. அண்ணாவுக்கும் இதே நாளில் தான் இந்த விருது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி எத்தனையோ விருதுகள் பரிசுகள் பாராட்டுக்கள் கிடைத்த போதும் அதில் எல்லாம் பெருமை கொள்ளாமல் தொண்டு ஒன்றையே தனது வாழ்நாளில் உயரிய லட்சியமாகக் கருதி அவர் பாடுபட்டார்.



1962ம் ஆண்டு பிலிப்பைன்சின் உயரிய விருதான மாக்சாசே விருது அன்னை திரேசாவுக்கு வழங்கப்பட்டது. அதே விருதை நமது சங்கத்தின் முன்னோடி டாக்டர் பி.பி.அண்ணாவுக்கும் வழங்கப்பட்ட போது பிடித்த படம்.

ஊருக்காக வாழ்ந்த அந்த உயர்ந்த உள்ளம் நோயால் ஊனப்பட்டது.

ஆம்! கடந்த 1989ம் ஆண்டில் மாரடைப்புக்கு இலக்கான அன்னை திரேசா 1991ம் ஆண்டில் அமெரிக்கா சென்று சிகிச்சை செய்து கொண்டார்.

கடந்த 1993ம் ஆண்டில் அமெரிக்காவில் மீண்டும் ஒரு இருதய ஆப்ரேஷன். 1993ம் ஆண்டில் கல்கத்தாவில் தொடர்ந்து இருதயச் சிகிச்சை செய்து கொண்டார்.

## உலகம் அழுதது!

இரவு பகல் பாராமல் உழைத்து உழைத்து களைத்த அன்னையின் உடல் நிலை கடந்த 1996ம் ஆண்டும் பிற்பகுதியில். மிகவும் மோசமடைந்தது. உலகமே அவர் உயிர்க்காக பிரார்த்தித்தது. 1996 ஆண்டில் ஆகஸ்ட் 22ம் தேதி அவரது இருதயம் இரண்டு நிமிடங்கள் நின்று போனதாக டாக்டர்கள் கூறினார்கள் எனினும் அவர் மீண்டு வந்தார்.

ஆனால் கடைசியாக அந்த செப்டம்பர் 5ம் தேதி தனது 87வது வயதில் அந்த தியாக உள்ளம் தனது இறுதி மூச்சை நிறுத்திக் கொண்டது. அதுவும் அவர் மகளைப் போல கருதி நேசித்த இளவரசி டயானா ஒரு விபத்தில் அகால மரணமடைந்த துயரத்தில் உலகம் மூழ்கி இருந்த நேரத்தில் அன்னை திரேசாவின் பிரிவுச் செய்தி வந்தது.

அரண்மனையில் அரச பீடத்தில் வாழ்ந்தாலும் வீதியில் நலிந்த மக்களுக்காக இறங்கி வந்த இளவரசி டயானாவின் அந்த பேருள்ளத்தில் மனம் பறி கொடுத்தவர் அன்னை திரேசா. இந்தியாவிக்கு வந்த போதெல்லாம் நான் அவரை சந்திப்பதே எனது லட்சியம் என்று கூறிய டயானாவின் உள்ளம், அன்னை திரேசாவை மனம் உருக்கியது.

உலகம் போற்றிய இருவேறு பெண்கள் தான். ஆனால் இருவருக்கும் இடையில் வித்தியாசம் உண்டு. டயானா உயரத்தில் வாழ்ந்தவர்! நல்ல பல காரியங்களால் பாராட்டப்பட்டவர்!

ஆனால்! தூய வெள்ளை ஆடையில், துயர் துடைப்பதையே தன் வாழ்நாளின் லட்சியமாகக் கொண்டு ஏழைகளுடன் வாழ்ந்து அவர்களுக்காக வாழ்ந்து மறைந்தவர்தான் அன்னை திரேசா! மனித சமூகத்திற்கு தானும் தொண்டாற்றி தனது வாழ்க்கையை தியாகம் செய்து, அதனை மற்றவர்களையும் பின்பற்றச் செய்த மாதர் குல மாணிக்கம் அவர். ஆம்! உலகெங்கும் அழும் மக்களின் கண்ணீரைத் துடைத்த ஒரு "கருணைக் கரம்" இன்று இமை மூடியது!

Published by MR. G. SANKARAN on behalf of National Union of Plantation Workers, P.O.Box 73, Petaling Jaya, Selangor Darul Ehsan. Tel: 03-7927622/ 7927718/ 7927861 Fax: 7915321 and
Printed by Percetakan Ambiha Sdn. Bhd., No.10, Jalan TPP 5/5, Tmn. Perindustrian Puchong, Section 5, 47100 Puchong, Selangor Darul Ehsan. Tel: 03-5724298 Fax: 7956946

படிப்பகம்